# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 13 புதன்கிழமை (28-11-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:02


## மாவீரர் தின உரையில் கேள்வி

# சமாதானமா? போரா? மக்களின் முடிவுக்கு!

## பொதுத் தேர்தல் ஒத்திவைக்கப்படுமா?

கொழும்பு,நவ.28

நாடுமுழுவதும் தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடித்துவரும் அதே வேளையில், பொதுத் தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்று நேற்றுக் கொழும்பில் செய்தி வட்டாரங்களில் பரபரப்பாக பேசப்பட்டது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவை பதவி நீக்கும்படி ஜனாதிபதியிடம் ஆறு சிரேஷ்ட அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும் கடிதம் மூலம் கோரி இருப்பதும் இந்த ஒத்திவைப்புக்கான ஆரம்ப நடவடிக்கையாக இருக்குமோ என்றும் அந்த வட்டாரங்களில் ஊகம் தெரிவிக்கப்பட்டது. எனினும் இந்தத் தகவலை எந்தச் செய்தி நிறுவனமும் நேற்றிரவு வரை உறுதிப்படுத்தவில்லை.

# பொதுத் தேர்தல் குறித்து தலைவர் பிரபா அறிவிப்பு

வவுனியா,நவம்பர்28

**"விடுதலைப் புலிகள் தேர்தலில் அக்கறை காட்டுவதில்லை. எனினும் எதிர்வரும் பொதுத்தேர்தல் தமிழீழத்திலும் தென்னிலங்கையிலும் விடுதலைப் புலிகளை மையப்பொருளாகக் கொண்டே நடைபெறுகின்றது.**

**"சமாதானம் வேண்டி நிற்கும் சக்திகளுக்கும் சமாதானத்திற்கு விரோதமான தீவிரவாதச் சக்திகளுக்கும் மத்தியிலான போட்டியாக இத்தேர்தல் நடக்கின்றது. எனவே எதிர்காலத்தில் இத்தீவில் சமாதானம் நிலவவேண்டுமா, போர் தொடர வேண்டுமா என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு பொதுமக்களிடம் விடப்பட்டிருக்கின்றது.**

**"தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காத வரை - அவர்களது அரசியல் அபிலாஷைகள் நிறைவேறாத வரை - இத்தீவில் சமாதானமும், இன ஒத்திசைவும், பொருளாதார மேம்பாடும் ஏற்படப்போவதில்லை என்பதை சிங்கள மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்."**

**- இவ்வாறு தமது மாவீரர் தின உரையில் குறிப்பிட்டிருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.**

தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரையில் பொதுத் தேர்தல் குறித்து அதிக விவரம் ஏதும் இடம் பெற்றிருக்கவில்லை.

ஏதேனும் தமிழ்க் கட்சிகள் குழுகளைக் கண்டித்தோ, வரவேற்றோ, ஆதரிக்கக் கோரியோ எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவுமில்லை.

பொதுத் தேர்தல் குறித்து அவர் வெளியிட்ட கருத்துக் கூட பெரும்பாலும் பெரும்பான்மைச் சிங்கள மகளுக்கு தெரிவிக்கப்பட்ட தொனியிலேயே அமைந்துள்ளது.

அவரது உரையில் பெரும் பகுதி உலக அரசியல் மாற்றமும் தமிழீழ விடுதலைப் போராட்டமும் சம்பந்தமானதாகவே இருந்தது.

தலைவர் பிரபாகரனின் நேற்றைய 17 நிமிட நீண்ட உரையின் முழு விவரமும் வருமாறு:-

(2ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய மாவீரர் தின நிகழ்வுகளின்போது......



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நேற்று வன்னியில் மாவீரர் நாள் உரையை நிகழ்த்தும் போது எடுக்கப்பட்ட படம்.



தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நேற்று மாவீரர்களின் நினைவாக ஈகைச்சுடர் ஏற்றுவதையும் அவரின் பின்னால் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# தடையே பேச்சுக்கு முட்டுக்கட்டையானால் அதனை நீக்க ஐ.தே.க. அரசு தயங்காது

## தனியார் தொலைக்காட்சிக்கு நேற்றிரவு ரணில் பேட்டி

கொழும்பு,நவ.28

அமைதித் தீர்வுக்காகப் புலிகளோடு சமாதானப் பேச்சு நடத்துவதற்கு புலிகள் மீதான தடை ஒரு தடையாக - முட்டுக்கட்டையாக - இருக்குமானால் அதை நீக்க ஐ.தே.க. அரசு பின்னிற்காது.

- இவ்வாறு கூறியிருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

நேற்றிரவு கொழும்பில் தனியார் ஒளிபரப்பு நிலையம் ஒன்றுக்குப் பேட்டி அளித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:-

சமாதானப் பேச்சுக்குப் புலிகள் மீதான தடைதான் ஒரு தடை என்றால், அதை நீக்குவோம். ஆனால் அது எப்போது நீக்கப்படும், அதற்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# போலி முகத்திரையைக் கிழித்துள்ளது பிரபாவின் உரை என்கிறது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம்,நவ.28

புலிகளின் தலைவர் பிரபாகரனின் உரை தமிழ்க் கட்சிக் கூட்டு எனக் கூறிக்கொள்ளும் வேட்பாளர்களின் போலி முகத்திரையைக் கிழித்துள்ளது என ஈ.பி.டி.பி.தெரிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக ஈ.பி.டி.பி. நேற்றிரவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்க் கட்சிகளின் கூட்டு எனக் கூறிக்கொள்பவர்கள் தேர்தல் நியமனப் பத்திரம் தாக்கல் செய்த நாள் முதல் செய்துவந்த போலித்தனமான பிரசாரத்தைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பேச்சு தவிடுபொடியாக்கியுள்ளது.

இந்தத் தேர்தலில் தாங்கள் புலி

(16ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியிலும் ஏனைய பகுதிகளிலும் நேற்று மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

## வவுனியா நகரில் புலிக்கொடி ஏற்றி அஞ்சலி நிகழ்வுகள்

வவுனியா,நவ.28

வவுனியாவில் இம்முறை புலிக்கொடி ஏற்றி, கடைகளைப் பூட்டி மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அதேசமயம் வடக்கு - கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் மாவீரர்தினம் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர் தின உரையை நாட்டு மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்தனர்.

தலைவர் பிரபாகரனின் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த அந்த உரை நேற்று மாலை 6.12க்கு ஆரம்பமானது.

வன்னி எங்கும் நேற்று மாலை 6.35 மணிக்கு கோயில்கள், தேவாலயங்களில் மணிகள் ஒலித்தன. 6.36க்கு அகவணக்கமும் 6.37க்கு ஈகைச்சுடர் ஏற்றும் நிகழ்ச்சியும் இடம் பெற்றன. தொடர்ந்து மாவீரர் துயிலும் இல்லங்களில் விசேட அஞ்சலி நிகழ்வுகள் உணர்ச்சி பூர்வமாக நடந்தன.

### இதயபூர்வ அஞ்சலி

வன்னியில் அலம்பில், முள்ளியவளை, விசுவமடு, கிளிநொச்சி, வன்னிவிளாங்குளம், துணுக்காய், ஆண்டான்குளம், முழங்காவில் ஆகிய இடங்களிலும் -

திருகோணமலையில் மூதூரிலும -

மன்னாரில் பெரியபண்டிவிரிச்சான்,

(16ஆம் பக்கம் பார்க்க)




அஞ்சாத வாழ்வுக்கும் அழிந்த வாழ்வை மீட்பதற்கும்

மீன் சின்னத்துக்கே உங்கள் வாக்கு

சுயேச்சைக் குழு

தம்பிராஜா சுபத்திரன் (றொபேட்)

(94871)

ஈ.பி.ஆர்.எல்.எவ்.

# சமாதானமா? போரா?.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று மாவீரர் நாள்.

விடுதலை வேண்டிக் களமாடி வீழ்ந்த எமது வீரப் புதல்வர்களை நாம் எமது நினைவில் உயிர்ப்பித்துப் பூசிக்கும் நன்நாள்.

தமிழ் இனத்தின் தேசிய வாழ்வு நிலைப்பதற்காகத் தமது சொந்த வாழ்வை ஈகம்செய்த சுதந்திர வீரர்களுக்கு நாம் சிரந்தாழ்த்தி வணக்கம் செலுத்தும் புனித நாள்.

விடுதலைக்காக எமது இயக்கம் கொடுத்த விலை அளப்பரியது. உலகத்தில் எந்த ஒரு விடுதலை இயக்கமும் புரியாத அற்புத சாதனைகளை நாம் ஈட்டினோம்; ஒப்பற்ற ஈகங்களைப் புரிந்து தியாகத்தின் சிகரங்களைத் தொட்டோம். இதனால் மானிடத்தின் விடுதலை வரலாற்றில், ஒரு மகத்துவமான இடத்தைத் தேடிக் கொண்டோம். எமது இனத்தின் வீரத்திற்கும் விடுதலை உணர்விற்கும் பெருமை சேர்க்கும் இம்மகோன்னத நிலைக்கு எம்மை இட்டுச் சென்றவர்கள் எமது மாவீரர்களே.

மனித நாகரிகம் தோன்றிய காலந்தொட்டே மனிதர்கள் விடுதலைக்காகப் போராடி வருகிறார்கள். அடக்குமுறைக்கும் அநீதிக்கும் எதிராக, யுகம் யுகமாக விடுதலைப் போராட்டங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. உலகில் அநீதியும் அடக்குமுறையும் தொடரும் வரை விடுதலைப் போராட்டங்களும் தொடரும். ஒடுக்கப்படும் மானிடத்தின் விடுதலையை நோக்கிய பயணமாகவே மனித வரலாறு நகர்கின்றது. ஒடுக்கப்படும் சமுதாயங்களிலிருந்தே வரலாறு படைக்கும் சக்திபெற்ற அபூர்வ மனிதர்கள் பிறக்கிறார்கள். எமது சமூகத்திற் பிறந்த அந்த அபூர்வ மனிதர்கள்தான் எமது மாவீரர்கள்.

## மாறி வரும் உலக ஒழுங்கு

இன்றைய உலக ஒழுங்கு மாறி வருகிறது. சர்வதேச அரசியல் உறவுகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றன. மனித உரிமைப் போராட்டங்கள் சம்பந்தமாக உலகின் பார்வையும் மாறிவருகிறது. அரசியற் கோட்பாடுகளிலும் தார்மீகக் கொள்கைகளிலும் அடிப்படை மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

அரசியல் இலட்சியங்களை அடைவதற்காக நடத்தப்படும் வன்முறை தழுவிய உரிமைப் போராட்டங்கள் அனைத்திற்குமே உலக அரசுகள் 'பயங்கரவாதம்' என்ற முத்திரையைக் குத்தியுள்ளன. இந்தக் குறுகிய வரையறையின் அடிப்படையில் உண்மையான உரிமைப் போராட்டங்களுக்கும் பயங்கரவாதத்திற்கும் மத்தியிலான வேறுபாடுகள் அழிக்கப்பட்டுள்ளன. அடிப்படை அரசியற் சுதந்திரங்களுக்காகவும் சுயநிர்ணய உரிமைக்காகவும் இரத்தம் சிந்திப் போராடும் விடுதலை அமைப்புகளின் தார்மீக அடிப்படைகளுக்கு இதுவொரு சவாலாகவும் எழுந்துள்ளது. இதுவொரு கவலைக்குரிய விடயம். இந்தப் புதிய போக்குக் காரணமாகச் சர்வதேச அரங்கில் எமது சுதந்திர இயக்கத்திற்கும் அவப்பெயர் ஏற்பட்டு வருகிறது.

பயங்கரவாதத்திற்கு எதிராகப் போர் தொடுத்து நிற்கும் உலகநாடுகள், முதலில் அரசியல் வன்முறையின் மூல வேர்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அரசியல் வன்முறையின் தோற்றப்பாடு பற்றி ஓர் ஆழமான பார்வை இருந்தால்தான் உண்மையான விடுதலைப் போராட்டங்களுக்கும் குருட்டுத்தனமான பயங்கரவாதச் செயல்களுக்கும் மத்தியில் வேறுபாடு காணமுடியும்.

## உரிமைப் போரின் நியாயத் தன்மை

எமது பார்வையில் அரசியல் வன்முறையில் இரு பரிமாணங்கள் உள்ளன.

முதலாவது - ஒடுக்குமுறையாளரின் வன்முறை.

இரண்டாவது - ஒடுக்கப்படுவோரின் வன்முறை.

ஒடுக்குமுறையாளர் எப்பொழுதுமே ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்; அரச அதிகாரம் உடையவர்கள்; ஆயுதப் படைகளை வைத்திருப்பவர்கள்.

ஒடுக்கப்படுவோர் எப்பொழுதுமே ஆளப்படும் வர்க்கங்களைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் சிறுபான்மைத் தேசிய இனத்தோராக, சுரண்டப்படும் மக்கள் சமூகமாக, ஏழைகளாக, அடிமைகளாக இருப்பார்கள்.

முதல்தர வன்முறையை அரச வன்முறை எனலாம்.

இரண்டாம்தர வன்முறையை அரச வன்முறைக்கு எதிரான வன்முறை எனலாம்.

அரச வன்முறையானது, ஒடுக்குமுறையாளரின் அடக்குமுறையான வன்முறை என்பதால் அது அநீதியானது. ஒடுக்குமுறைக்கு எதிரான ஒடுக்கப்படுவோரின் வன்முறை நீதியானது. ஏனெனில் அது அநீதிக்கு எதிராக நீதியை நிலைநாட்டும் நோக்குடன் மேற்கொள்ளப்படுகிறது. இவ்விதமான வேறுபாட்டில்தான் ஒடுக்கப்படும் மக்களது வன்முறை வடிவிலான உரிமைப் போராட்டங்கள் நியாயத் தன்மை பெறுகின்றன.

வன்முறை வடிவில் உருவகம் பெறும் அரசியல் உரிமைப் போராட்டங்கள் அரச வன்முறையின் எதிர்வினையாகவே எழுகின்றன. உலக விடுதலைப் போராட்டங்களின் மூலத்தை ஆய்வுசெய்து பார்த்தால் இந்த உண்மை புரியும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று மூலமும் அதுதான். விடுதலைப் புலிகள் இயக்கம் உதயமாவதற்கு இரண்டு தசாப்தங்களுக்கு முன்னரே இலங்கைத் தீவில் அரச ஒடுக்குமுறை தலைதூக்கியது. இனவாதத் தீயாக மூண்ட இந்த அரச ஒடுக்குமுறை, படிப்படியாக வளர்ச்சிகண்டு தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கொலை வடிவம் எடுத்தது.

சிங்கள அரச வன்முறைக்கு எதிராகத் தமிழர்கள் நிகழ்த்திய அகிம்சை வழியிலான அரசியற் போராட்டங்கள் அனைத்தும் அரச வன்முறையால் அடக்கியொடுக்கப்பட்டன. அமைதி வழிப் போராட்டங்கள் அர்த்தமற்றுப் போய்விட்ட அதேவேளை, அரச அடக்குமுறை தீவிரமடைந்து, இனக்கொலைப் பரிமாணம் பெற்றதால், தமிழ் மக்கள் அரச வன்முறையை வன்முறையால் எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இன்னொருவகையிற் சொல்வதானால் பேரழிவை எதிர்கொண்ட தமிழினம், தனது இருப்பிற்காக, தனது பாதுகாப்பிற்காக, ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்த வரலாற்றுப் புறநிலையில்தான் விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்றம்பெற்று அரச வன்முறைக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தது. இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடரும் எமது ஆயுத எதிர்ப்புப் போராட்டமானது இன்று தமிழரின் அரசியற் போராட்ட வடிவமாக வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டிருக்கிறது.

## நியாயபூர்வமான போராட்டம்

நாம் ஒரு தேசிய விடுதலை இயக்கம். இனவாதக் கொடுமைக்கு எதிராக, அந்நிய இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக, அரச பயங்கரவாத வன்முறைக்கு எதிராக நாம் விடுதலை வேண்டிப் போராடி வருகின்றோம். எமது போராட்டம் ஒரு தீர்க்கமான, நியாயபூர்வமான அரசியற் குறிக்கோளைக் கொண்டது. ஐநா.சாசனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் எமது போராட்டம் நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் பயங்கரவாதிகள் அல்லர். மதவாத, இனவாத வெறியால் உந்தப்பட்டுக் குருட்டுத்தனமான வன்முறையில் ஈடுபடும் மனநோயாளர்களும் அல்ல. மனித விடுதலை என்ற உன்னதமான விழுமியத்திற் காதல் கொண்டே நாம் உயிரைக் கொடுத்துப் போராடி வருகின்றோம். நாம் சுதந்திரத் தாகம் கொண்ட இலட்சியவாதிகள். நாம் சுதந்திரப் போராளிகள். கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக எம்மை அழிப்பதற்கு முயன்று தோல்விகண்ட சிங்கள அரச பயங்கரவாதிகள், எமது விடுதலைப் போராட்டத்திற்குப் பயங்கரவாத முலாம் பூசி வருகிறார்கள். இந்த அரச பயங்கரவாதிகளின் பொய்யான, விசமத்தனமான பரப்புரைகளை நம்பி உலக நாடுகள் சில எமது விடுதலை அமைப்பையும் பயங்கரவாதிகள் பட்டியலிற் சேர்த்துள்ளன. இது எமக்கு கவலையையும் ஏமாற்றத்தையும் கொடுக்கிறது. ஆயுத எதிர்ப்பு இயக்கமாக வளர்ந்து நிற்கும் தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் வரலாற்றையும் நியாயப்பாடுகளையும் சீதூக்கிப்பாராது. இராஜதந்திர அழுத்தங்களுக்குப் பணிந்து, அவசரப்பட்டு எடுக்கப்பட்ட இந்நடவடிக்கைகள் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும். குறிப்பாகச் சிங்கள இனவாத ஆட்சியாளர்களுக்கு இவை ஒரு தவறான தகவலைக் கொடுக்கும். அவர்களது விட்டுக்கொடுக்காத கடும்போக்கை மேலும் கடுமையாக்கும். அத்தோடு அவர்களது இராணுவ அடக்குமுறைக் கொள்கைக்கும் ஊக்கமளிப்பதாக அமையும். ஒட்டுமொத்தத்தில் மேற்குலக நாடுகளின் இந்நடவடிக்கைகள், சமாதான வழிமூலமான தீர்விற்குக் குந்தகம் விளைவித்து, தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை மேலும் சிக்கலடையச் செய்யும்.

## காவற் படையில் கொலை குற்றவாளிகள்

பயங்கரவாதத்திற்கு எதிராக மேற்குலகம் தொடுத்துள்ள போரில் ஐநாவில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசுகளும் அணி சேர்ந்து நிற்கின்றன. இனவாத ஒடுக்குமுறைக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் புகழ்போன பல அடக்குமுறை அரசுகளும் இந்தச் சர்வதேசக் கூட்டணியில் இணைந்து நிற்கின்றன - அதாவது, காவற்துறையினருடன் கொலைக் குற்றவாளிகள் கைகோர்த்து நிற்பது போல. நாம் இங்கு ஸ்ரீலங்கா அரசை மட்டும் குறிப்பிட விரும்புகிறோம்.

இனக்கொலைப் பரிமாணத்தில் மனித உரிமை மீறல்களை நடத்தி, உலகசாதனை ஈட்டியிருக்கும் இந்தப் பயங்கரவாத அரசு, உலகப் பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேசக் கூட்டணியில் இணைந்து நிற்கிறது. இன்றைய சர்வதேச ஒழுங்கமைப்பில் இது ஓர் ஆபத்தான போக்கைக் குறித்துக் காட்டுகிறது. உலக ரீதியாக அரச அடக்குமுறைக்கு ஆளாகி நிற்கும் மக்கள் சமூகங்களின் நியாயமான உரிமைப் போராட்டங்களுக்கு இப்புதிய போக்கானது ஓர் அச்சுறுத்தலாக அமைகிறது. பயங்கரவாத வன்முறைக்கு எதிராகப் போர்தொடுத்து நிற்கும் மேற்குலக நாடுகளின் ஆவேசத்தையும், அச்சங்களையும், நிர்ப்பந்தங்களையும் எம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. உண்மையான பயங்கரவாதிகளை இனங்கண்டு தண்டிக்கும் நோக்குடன் சர்வதேச உலகம் மேற்கொள்ளும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை நாம் வரவேற்கிறோம். ஆயினும், அதேவேளை தீவிரவாதவெறியில் எழும் குருட்டுத்தனமான பயங்கரவாதத்திற்கும், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் சுதந்திரப் போராட்டங்களுக்கும் மத்தியிலான வேறுபாட்டினை விளக்கும் வண்ணம் மேற்குலக சனநாயக நாடுகள் பயங்கரவாதம் என்ற பதத்திற்கு விரிவான, விளக்கமான வரையறையைக் கொடுப்பது அவசியமாகும். உள்நாட்டில் இனக்கொலைப் பரிமாணத்திற் கொடுமைகளை இழைத்துவரும் அடக்குமுறை ஆட்சியாளர்களின் அரச பயங்கரவாதத்தை சர்வதேச உலகம் அலட்சியம் செய்யமுடியாது. இந்தப் பயங்கரவாத அடக்குமுறை அரசுகளை இனங்கண்டு தண்டிக்க உலகம் முன்வரவேண்டும்.

## விடுதலைப் புலிகள் மக்கள் இயக்கம்

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு மக்கள் இயக்கம். விடுதலைப் புலிகள் வேறு, எமது மக்கள் வேறு அல்லர். எமது மக்களும் நாமும் ஒன்றாகப் பிணைந்து ஒன்றுபட்ட சக்தியாக, ஒரே இலட்சியப் பாதையில் எமது தாயகத்தின் விடிவுக்காகப் போராடி வருகிறோம். எமது இயக்கத்தை எமது மக்களிடம் இருந்து அந்நியப்படுத்தி எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிட சந்திரிகா அரசு வஞ்சகமான வழிகளைக் கையாண்டது. எம்மைப் பயங்கரவாதிகளாகப் பிரகடனம் செய்து, எமது இயக்கம் மீது தடையை விதித்தது. இதனைத் தொடர்ந்து சந்திரிகாவும் அவரது வெளிவிவகார அமைச்சரான திரு. கதிர்காமரும் எமது இயக்கத்தையும் தமிழரின் விடுதலைப் போராட்டத்தையும் பயங்கரவாதப் பூதமாகப் பூச்சாண்டி காட்டி சர்வதேச அரங்கில் தீவிர பரப்புரைப் போரைத் தொடுத்தனர். இதன் விளைவாக அமெரிக்காவும் பிரிட்டனும் அதனைத் தொடர்ந்து சமீபத்தில் கனடாவும் எமது விடுதலை அமைப்பை சர்வதேச பயங்கரவாதிகளின் பட்டியலில் சேர்த்துள்ளன.

## தடையை நீக்கினால் மட்டுமே பேச்சு

நாம் ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல என்பதும் நாம் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் ஒரு சுதந்திர இயக்கம் என்பதும் எமக்குப் பின்னால் எமது மக்களின் ஏகோபித்த ஆதரவு அணிதிரண்டு நிற்கிறது என்பதும் எம்மைத் தடைவிதித்த இந்நாடுகளுக்கு நன்கு தெரியும். அத்தோடு, தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காணப்படவேண்டும் என்பதும் ஸ்ரீலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் பேச்சு மூலம் இணக்கப்பாடு காணவேண்டும் என்பதும் இந்நாடுகளின் நிலைப்பாடாக இருக்கிறது. இந்நிலைப்பாடானது ஓர் உண்மையைப் புலப்படுத்துகிறது. அதாவது, தமிழீழ மக்களின் அரசியற் பிரதிநிதிகளாகவே விடுதலைப் புலிகளை இந்நாடுகள் கருதுகின்றன. அப்படியென்றால் ஏன் எமது அமைப்பைப் பயங்கரவாத இயக்கமாக இந்நாடுகள் முத்திரை குத்தவேண்டும்? எனவே, இந்நடவடிக்கையானது எந்தவகையிற் சமாதான ரீதியான ஒரு தீர்வை ஏற்படுத்த ஏதுவாக அமையும் என்பது எமக்குப் புரியவில்லை. ஸ்ரீலங்கா அரசு எம்மீது விதித்துள்ள தடையை நீக்கி, எமது இயக்கத்தைத் தமிழீழ மக்களின் உண்மையான - சட்டரீதியான - அரசியற் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் நாம் சமாதானப் பேச்சுகளில் பங்குபற்றப் போவதில்லை என்பதே எமது நிலைப்பாடு. இந்த நிலைப்பாட்டில் நாம் மிகவும் உறுதியாக இருக்கிறோம். நோர்வே அரசிடமும் நாம் இதனைத் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறோம். விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால்தான் இலங்கைத் தீவில் சமாதானம் தோன்றுவதற்கு வாய்ப்புண்டு. இப்படியான சூழ்நிலையிற் ஸ்ரீலங்கா அரசின் அழுத்தத்திற்கு இசைந்து மேற்குலக நாடுகள் எம்மீது தடைகளை இறுக்கினால் அது சமாதானப் பேச்சுக்கும் சமாதான வழியிலான தீர்விற்கும் வழிகோலப்போவதில்லை. மாறாக, சமாதானப் பேச்சுக்குப் புலிகள் மீதான தடை நீங்க வேண்டும் என்ற எமது மக்களின் கோரிக்கைக்கு, இந்நடவடிக்கைகள் மேலும் வலுச்சேர்க்கும்.

## சமாதானம் குறித்து இன்னும் நம்பிக்கையுண்டு

முழு அளவிலான போர் நெருக்கடியாக வெடித்துள்ள தமிழரின் தேசிய இனப்பிரச்சினை, அடிப்படையில் ஓர் அரசியற் பிரச்சினை என்பதை நாம் அறிவோம். இப்பிரச்சினையைச் சமாதான வழிமுறைகள் மூலமாகத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை இன்னும் எம்மிடம் முற்றாக இடிந்து போகவில்லை. சிங்கள அரசியல் தலைமைகள் உண்மையாக, உறுதியுடன் மனம்வைத்தால் சமாதானமும் இணக்கப்பாடும் ஏற்படும் சாத்தியமுண்டு.

இலங்கைத் தீவுக்குச் சுதந்திரம் கிடைத்து ஐம்பத்திமூன்று ஆண்டுகள் ஆகியும் சிங்கள அரசியல் தலைமைகள் இன்னும் இனவாத சித்தாந்தச் சகதிக்குள் இருந்து வெளிவரவில்லை. இதனால் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை யதார்த்தமாக, புறநிலை நோக்குடன் அணுகித் தீர்க்கும் மனப்பக்குவம் அடையவில்லை. அடக்குமுறையாலும் ஆயுதப் பலத்தாலும் தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்ற மனநிலையே சிங்கள அரசியல் உலகில் மேலோங்கி நிற்கிறது. இதன் காரணமாக எந்தவொரு சிங்களக் கட்சியிடமும் தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் அணுகுமுறையோ, கொள்கைத் திட்டமோ இருக்கவில்லை. இந்த உண்மை சர்வதேச சமூகத்திற்குத் தெரியாததல்ல. தமிழர் பிரச்சினைக்குச் சமாதான வழி மூலமான தீர்வை வலியுறுத்தும் உலகநாடுகள், அதே சமயம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பலவீனப்படுத்தும் ஸ்ரீலங்காவின் இராஜதந்திர நகர்வுகளுக்கும் போர் முயற்சிகளுக்கும் முண்டுகொடுத்து உதவத் தவறவில்லை. உலகநாடுகளின் இந்த விசித்திரமான அணுகுமுறையும் தமிழரின் பிரச்சினை தீராது இழுபடுவதற்கு ஒரு காரணம் எனலாம்.

சமாதானத்தின் கதவுகளை நாம் தட்டியவண்ணமே இருக்கிறோம். ஆனால் சந்திரிகா அரசு சமாதானத்தின் கதவுகளைத் திறக்க மறுக்கிறது.

சென்ற வருடம் நவம்பர் மாதத்தில் நாம் நோர்வேயின் தூதுவர்களைச் சந்தித்து உரையாடியதை அடுத்து சமாதான முயற்சியை முன்னெடுக்கும் நோக்குடன் நான்கு மாதங்களுக்கு ஒருதலைப்பட்சமாகப் போர்நிறுத்தம் செய்தோம். சந்திரிகா அரசு எமது அமைதி முயற்சியைக் கேலி செய்து நிராகரித்ததுடன் ஆத்திரமூட்டும் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. இறுதியாக எமது போர்நிறுத்தம் முடிவடைந்த ஒரு சில மணி நேரத்துக்குள் "அக்கினிச் சுவாலை" என்ற பாரிய படையெடுப்பை மேற்கொண்டது. இப்படையெடுப்பை முறியடித்து நாம் நடத்திய மூர்க்கமான எதிர்த்தாக்குதல் சிங்கள அரசுக்கு ஓர் உண்மையைப் புலப்படுத்தியது. அதாவது, விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்படமுடியாத பலம் பொருந்திய சக்தியாக இருக்கிறது என்பதை உணர்த்தியது.

ஆள்பலத்தோடும் ஆயுதப் பலத்தோடும் நாம் வலுமிக்க போராட்ட சக்தியாக வளர்ச்சிகண்டு நின்றபோதும் சமாதான வழிமுறைக்கு வாய்ப்பளிக்கும் நோக்குடன் இவ்வாண்டு தரை மார்க்கமாகப் பாரிய படை நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. நோர்வே அரசின் சமாதான முயற்சிகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கி வந்தோம். இந்தச் சூழ்நிலையில்தான் நோர்வேயின் சமாதானத் தூதுவரான திரு.எரிக் சொல்ஹெய்ம் புலிகளுக்குப் பக்கச்சார்பானவர் எனப் பொய்க் குற்றம் சாட்டி, சந்திரிகா அரசு அவரை ஓரம்கட்டி ஒதுக்கியது. இதனை நாம் கடுமையாக ஆட்சேபித்தோம். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து நோர்வே அரசின் சமாதான முயற்சிக்குத் தடை ஏற்பட்டது. இதற்குப் பொறுப்பாளி சந்திரிகா அரசுதான்.

## பொதுத் தேர்தல்

மிகவும் நெருக்கடியான வரலாற்றுத் திருப்பத்தில், இலங்கைத் தீவில் நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. நாம் நாடாளுமன்றத்திற்குப் புறம்பாக நின்று போராட்டத்தை முன்னெடுக்கும் விடுதலை அமைப்பு என்பதால் நாம் தேர்தல்களில் அக்கறை காட்டுவதில்லை. எனினும் எதிர்வரும் பொதுத்தேர்தல் தமிழீழத்திலும் தென்னிலங்கையிலும் விடுதலைப் புலிகளை மையப் பொருளாகக் கொண்டு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் முதன்மையான பிரச்சினையாக முனைப்புற்று நிற்கும் தமிழரின் தேசிய இனச்சிக்கலானது சமாதானம், போர் என்ற இரு முரண்பட்ட துருவங்களில் அரசியல் சக்திகளை ஈர்த்துவருகிறது. சமாதானம் வேண்டி நிற்கும் சக்திகளுக்கும் சமாதானத்திற்கு விரோதமான தீவிரவாத சக்திகளுக்கும் மத்தியிலான போட்டியாக இத்தேர்தல் நடக்கிறது. எனவே எதிர்காலத்தில் இத்தீவில் சமாதானம் நிலவ வேண்டுமா, போர் தொடர வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு பொதுமக்களிடம் விடப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காத வரை, அவர்களது அரசியல் அபிலாசைகள் நிறைவேறாத வரை இத்தீவில் சமாதானமும் இன ஒத்திசைவும் பொருளாதார மேம்பாடும் ஏற்படப் போவதில்லை என்பதைச் சிங்கள மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

நாம் சிங்கள மக்களுக்கு விரோதிகள் அல்லர். எமது போராட்டமும் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல. சிங்கள இனவாத அரசியல்வாதிகளின் அடக்குமுறைக் கொள்கை காரணமாகவே தமிழ், சிங்கள இனங்கள் மத்தியில் முரண்பாடு எழுந்து போராக வெடித்திருக்கிறது. ஆயுதப்பலத்தினால் எமது மக்களை அடிமை கொள்ள முனையும் அரசுக்கும் அரசப்படைகளுக்கும் எதிராகவே நாம் போர் புரிந்து வருகிறோம். இந்தப் போரானது தமிழ் மக்களை மட்டுமன்றி சிங்கள மக்களையும் ஆழமாகப் பாதித்து வருகிறது என்பது எமக்குத் தெரியும். போர் வெறிகொண்ட அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைக் கொள்கையால் பல்லாயிரக் கணக்கான அப்பாவிச் சிங்கள இளைஞர்களும் அநியாயமாகக் கொல்லப்பட்டு வருகிறார்கள். அதுமட்டுமன்றி இப்போரினால் எழும் பொருளாதாரப் பளுவைச் சிங்களப் பொதுமக்களே சுமக்க வேண்டி உள்ளது என்பது எமக்குத் தெரியும். எனவே, இக்கொடிய போருக்கு முடிவு கட்டி, நிரந்தரச் சமாதானத்தை நிலைநாட்டுவதாயின் போர் வெறிகொண்ட இனவாத சக்திகளை இனங்கண்டு ஒதுக்கிவிடுவதோடு, தமிழ் மக்களுக்கு நீதி வழங்கவும் சிங்கள மக்கள் முன்வர வேண்டும்.

## தமிழரின் விருப்பம்

தமிழ்மக்கள் தமது இனத்துவ அடையாளத்துடன் தமது சொந்த மண்ணில், வரலாற்று ரீதியாகத் தாம் வாழ்ந்து வந்த தாயக மண்ணில், நிம்மதியாக, சமாதானமாக, கௌரவத்துடன் வாழ விரும்புகிறார்கள். அவர்களது அரசியற் பொருளாதார வாழ்வை அவர்களே நிர்ணயித்துக் கொள்ள விரும்புகிறார்கள். தம்மை நிம்மதியாகத் தம்பாட்டில் வாழ விடுமாறு கேட்கிறார்கள். இதுதான் தமிழர்களது அடிப்படையான அரசியல் அபிலாசை. இது பிரிவினைவாதமோ, பயங்கரவாதமோ

(15 ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001
## யாழ்.மாவட்டம்



தனிப்பெருந் தலைவர்
ஜீ.ஜீ.பொன்னம்பலம்





தியாக மாமனிதர்
குமார் பொன்னம்பலம்

## கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்

✪ தமிழன் குரல் தரணியெங்கும் ஒலித்திடத் தக்கதோர் தனயனைத் தந்து தம்மைத் தமிழினத்துக்காக அர்ப்பணித்த, மாபெரும் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் வழியில், தனது உயிரைத் துச்சமென மதித்துத் தமிழினத்துக்காக உயிர் கொடுத்த தியாகப் பிரம்மம் மாமனிதர் குமார் பொன்னம்பலம் வழியில், தமிழுணர்வு, அரசியல் ஞானம், இலட்சியப் பற்றுடன் தந்தையின் இலட்சியத்தைச் சிந்தையில் கொண்ட நம்பிக்கை நட்சத்திரம், உங்கள் முன் "வராது போல் வந்த மாமணியாய்" நிற்கின்ற தம்பி **பரிஸ்டர் கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம் (இல.8)** அவர்களை வெற்றிபெறச் செய்யவேண்டியது காலத்தின் தேவையாகும்.

✪ உங்கள் பிரதிநிதியாய் கடந்த தேர்தலில் தெரிவுசெய்தீர்கள். நாடாளுமன்றத்தின் உள்ளும் புறமும் உரிமைக் குரல் எழுப்பிய உத்தமன், நீதிமன்றங்களில் நம் இளைஞர் தம் நீதிக்காய் நியாயக் குரல் எழுப்பிய நியாய துரந்தர் **திரு.அப்பாத்துரை விநாயகமூர்த்தி (இல.1)** அவர்கள் தொடர்ந்தும் உங்களுக்குச் சேவையாற்ற உங்கள் முன் நிற்கிறார். அவரையும் வெற்றி பெறச்செய்வீர்கள் என்பதில் ஐயமில்லை.

✪ அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இத்தேர்தலில் தமது மூன்று வேட்பாளர்களில் ஒருவராக யாழ்ப்பாண மக்கள் நன்கறிந்த சேவையாளர், முன்னாள் யாழ்.மாநகர சபை ஆணையாளர், செயல் வீரர் **சி.வி.கே.சிவஞானம் (இல.5)** அவர்களையும் நிறுத்தியுள்ளது. ஆதலினால் அவரின் வெற்றியையும் உறுதிசெய்யுங்கள்.

✪ யாழ்.மக்கள் சார்பாகத் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர்களாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் செயல் வீரர், வல்லார், நல்லார் என இத்தக்க மூன்று அபேட்சகர்களையும் வெற்றி பெறச்செய்து வல்லார் மூவரையும் யாழ்.மண்ணின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் அனுப்பி வைப்பீர்கள் என்பது திண்ணம்!

தமிழினம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழினத்துக்காக ஒன்றுபட்டு நிற்கும் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புக்கு வாக்களிப்பது இன்றைய காலத்தின் தலையாய தேவையும், கடமையும் ஆகும். அந்த வகையில் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் சின்னமான உதயசூரியனுக்கு வாக்களித்துத் தமிழ்த் தேசிய இனத்தின் ஒருமைப்பாட்டினையும் உலகறியச் செய்யுங்கள்!

X 1 5 8

(94873) - தென்மராட்சி வாழ் மக்கள்.

# கிளிநொச்சி வாழ் வாக்காளப் பெருமக்களே!

## ஞானசுந்தரம் ஆனந்தகுமார்



**என் அன்பின் இனிய நெஞ்சங்களே!**

தமிழ் தேசிய இனத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் இலங்கை நாடாளுமன்றத்திற்காக 12 ஆவது பொதுத் தேர்தல் எதிர்வரும் டிசெம்பர் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் நான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுகின்றேன்.

இன்று உள்ள யுத்தக் கெடுபிடிகளுக்கு மத்தியில் நான் உங்களை கிளிநொச்சிப் பிரதேசத்தில் வந்து சந்திக்க முடியாத நிலையில் உள்ளேன். அதற்காக முதற்கண் என்னை மன்னிக்கவும்.

**அன்பார்ந்த மக்களே!**

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை தீர்க்கக் கூடிய அரசியல் தீர்வொன்று முன்வைக்கப்படவேண்டும். இதற்கான பேச்சுவார்த்தை நடத்தப்பட சமாதான சூழ்நிலையுடனான, நடைபெறும் கொடூர யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். இதற்காக நாடாளுமன்றம் சென்று உழைப்பதே எனது முதற்கடமையாகும். யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதான சூழ்நிலையில் அரசியல் தீர்வொன்று காணப்பட்டால் எமது முக்கிய பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்துவிடும். இதற்கு முன்னின்று குரல் எழுப்புவதுடன் நீங்கள் இன்று கிளிநொச்சியிலும் வன்னியிலும் படும் அல்லல்களை, அவலங்களை நான் நன்கு அறிவேன். வெறும் பொழுதுபோக்கிற்காக நான் அரசியலில் ஈடுபட முன்வரவில்லை. எனக்கு அரசியல் மூலம் சுயலாபம் தேடவேண்டிய அவசியம் இல்லை. இதயசுத்தியுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுவேன். அரசாங்கம் அளிக்கும் வரப்பிரசாதங்களுக்காக நான் ஏங்குபவன் அல்ல. உங்கள் மனங்களில் குடியிருக்கும் வரம் கிடைத்தால் போதும். பெரும்பான்மை வாக்குப் பலத்துடன் என்னை நாடாளுமன்றம் அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

இவ்வண்ணம்
நல்லதை நாடும்
உங்கள் அன்பன்
**ஞா.ஆனந்தகுமார்.**

X 4

(C/19503)


**SHAMROCK**
**A/L DAY CLASS**
ஆரம்பம் 29/11 வியா. 7a.m.
Com. :- Mr.பசில் B.B.A.
Acc. :- Mr.தவா B.com.(Hons)Acc. - (Spl.)
Ec. :- பிரபல ஆசிரியர் (C/19507)

**நாகம்ஸ்** சுன்னாகம்
ரஜனி, பிரபு, கௌதமி, சோ நடித்த
**குரு சிஷ்யன்**
(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 3.00 (புதிய நேரம்) (95016)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
சரத்குமார், சுகன்யா, கவுண்டர் நடித்த
**இளவரசன்**
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.) (C-19383)

**ராஜா** யாழ்ப்பாணம்
இரண்டாவது வாரமாக
கமல், மனீஷா மற்றும் பலர் நடித்த
**ஆளவந்தான்**
தினசரி:- 10.30,2,5 (புதிய நேரம்)
சனி,ஞாயிறு 10.30,2,5 (புதிய நேரம்) (C/19317)

**SPECIAL OFFER**
**COMPUTER - 39,500/- ONLY**
*333 MHZ speed, 20 GB HDD, 64 MB RAM*
*14" Monitor, 8MB VGA, 32 bit Sound Card*




யாருடைய பாவனைக்கு?
*Training Institutes*
*Typesetting Centres (DTP)*
*Students*
இச் சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே
புதிதாக கணனித் துறையில் தொழில் செய்ய ஆரம்பிப்பவர்களுக்கு
*Free - Internet & e-mail connection • One year Labour Warranty*
கொழும்பிலும் பணத்தைச் செலுத்தி யாழ்.நகரில் Computerஐ பெற்றுக்கொள்ளலாம்
Computer Accessories

| | |
|---|---|
| Software CDs | 250/- |
| Indian Cliparts | 250/- |
| Tamil MP3 Songs | 250/- |
| Tamil Software (பதமி) | 1,850/- |

**MICRO PC SYSTEMS**
No. 9, Modern Market, Hospital Road, Jaffna. Telephone : 021-2067
Head Office:- *No.15, 36th Lane, Wellawatte, Colombo -06*
*Telephone :- 074-513235, 074-516764*
Branch:- *No.82, New Chetty Street, Kotahena, Colombo-13.*
*Telphone:074 - 619673. Web : www.mipaq.com*


We Serve
## தீவக லயன்ஸ் கழகம்
## இலவச காகிதாதிகள் வழங்கல்

இடம்: யா/வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி ம.ம.வித்தியாலயம்.
காலம்: இன்று 28.11.2001 புதன்கிழமை.
பயன்பெறும் பாடசாலைகள்:-

யா/சேர் வை.து.ம.ம.வித்தியாலயம்.
யா/சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம்.
யா/வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம்.

வழங்கி கௌரவிப்பவர்: லயன் எந்திரி ஜீ.சிவபாலன்,
தீவக லயன்ஸ் கழகம். (95050)

யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
மிருசுவில்
## பரிசளிப்பு விழா

நாள்: நாளை 29.11.2001 வியாழக்கிழமை
நேரம்: காலை 9.30 மணி
இடம்: யங் றோயல் - நெல்லியடி

பாடசாலை நலன் நாடும் அன்பர்கள்
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

க.திருநாவுக்கரசு, செயலாளர். (95045) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

## மரண அறிவித்தல்
### முத்துக்குமாரசுவாமி செல்வக்குமாரசுவாமி

நந்தாவில் வீதி, தாவடி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரசுவாமி செல்வக்குமாரசுவாமி அவர்கள் நேற்று (27.11.2001) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரசுவாமி - இரத்தினகாந்தி தம்பதியினரின் அன்பு மகனும் பாலசோதியின் அன்புக் கணவரும் வினோவின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற சோமசுந்தரம், பூமணி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

தகவல்:
*தொ.பே. இல. 074 - 613509* (C/19510) **பாலசோதி** (மனைவி)



**தி.மகேஸ்வரன்**
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்,
முதன்மை வேட்பாளர்.
இல. 4

## பொதுத் தேர்தல் 2001 யாழ்.மாவட்டம்
## ஐக்கிய தேசியக் கட்சி

எம்மினக் கலைஞர்களும், கல்வியியலாளர்களும்,
பல்துறையினரும், கிறிஸ்தவரும், இந்துக்களும் அனைவரும்
அன்றாடப் பிரச்சினைகளும் அகதி வாழ்வும் நீங்கி,
சாந்தியும், சமாதானமும், சமத்துவமும் பெறவைப்பதே
எம் தலையாய கடன்.

X



**எல்.திலகநாயகம் போல்**
யாழ்.மாவட்டம் இல. 9

(94861)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வேலுப்பிள்ளை செல்லம்மா

ஸ்ரீமதி வீதி மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை நிரந்தர வதிவிடமாகவும் உரும்பிராயைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை செல்லம்மா அவர்கள் நேற்று (27-11-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் மயில்வாகனம் (ஜேர்மனி), பொன்னரியம், துரைசிங்கம் (கிராம அலுவலர், மட்டுவில் - நுணாவில் J/311), மனோரஞ்சிதன் (சுவிஸ்), கந்தசாமி (ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), செல்வராணி (சுவிஸ்), ஞானச்சந்திரன், செல்வரதி, அன்பழகன் (ஆசிரியர், யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமலாம்பிகை, அப்புத்துரை (ஓய்வுபெற்ற அதிபர், யா/மட்டுவில் வடக்கு அ. த. க. பா), புவனேஸ்வரி, இராஜேஸ்வரி (சுவிஸ்), சாந்தநிர்மலா, குணசிங்கம் (சுவிஸ்), விஜயநிர்மலா, கிருஷ்ணன் (ஆசிரியர், யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெயலதா (ஆசிரியை, யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்). ஜெயபாலன் (நோர்வே), ஜெயசீலன் (கனடா), ஜெயமாறன், ரவிச்செல்வன் (கனடா), கலைச்செல்வன் (சுவிஸ்), சுஜேந்தினி, முகுந்தன், துஷ்யந்தி, துஷ்யந்தன், பிரியந்தன், நிரோஜ் (சுவிஸ்), நிருசன் (சுவிஸ்), வர்ணிகா, நிருஷிகா, தயாளினி (சுவிஸ்), வினோதன் (சுவிஸ்), கிருசாந்தினி (சுவிஸ்), செந்தானன், சுருதிகா, அபிவர்ணன், நிரோசன். நிவேதிகா, நிருத்திகா, நிந்துஜன், வாசுகி (நோர்வே), தர்சிகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆராதனா, அகிம்சா, சுவர்ணிகா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28 - 11 - 2001) இன்று புதன்கிழமை பி. ப. 1.00 மணிக்கு அவரது தற்காலிக வசிப்பிடத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் எருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

வே. அன்பழகன் (மகன்)
மட்டுவில் தெற்கு.

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (95030)

## இளையதம்பி நாகலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர்,
யா/ அருணோதயாக் கல்லூரி)

சட்டுவனைப் பிறப்பிடமாகவும், பெருமாக்கடவை அளவெட்டி, மல்லாகம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்டு தற்பொழுது வத்தளையில் வசித்து வந்தவருமாகிய இளையதம்பி நாகலிங்கம் அவர்கள் நேற்று (27-11-2001) செவ்வாய்க்கிழமை வத்தளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை (நொத்தாரிஸ்) தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இரத்தினபூபதி (ஆசிரியை) யின் அன்புக் கணவனும், இரவீந்திரன் (கனடா), தயாபரி (வத்தளை), தவநிதி, தயாளநிதி (கனடா), தயாநிதி (கனடா) ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், திரிபுரசுந்தரி (கனடா), லோகநாதன் (கிறீக்). தயாளகேசரி (கல்கி சன்ஸ்), இளங்கோ (கனடா), பாலேந்திரா (கனடா) ஆகியோரின் மாமனாரும், அபிராமி, அருசுனா, கிருஸ்ணா (கனடா), சதீஸ், ஆனந் (வத்தளை), ஹரேஷாத் (மாணவன், இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்). ஹரிஷந் (மாணவன், மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்), வித்தியா, சத்தியா நிலாந்தி, அனோயன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 44, கெரவலப்பிட்டியா வீதி, கெந்தளை, வத்தளை (075-342178) யிலுள்ள அவரது இல்லத்தில் நாளை (29-11-2001) வியாழக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்.

திருமதி தவநிதி தயாளகேசரி (மகள்)

தந்தி ஒழுங்கை,
83/7, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (95038)

## திருமதி நாகேஸ்வரி சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற தெ.வ ஆசிரியை)

கொக்குவில் கிழக்கு, நந்தாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி சுப்பிரமணியம் நேற்று (27-11-2001) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் இராசையா- இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் தனபாலசிங்கம், கிருஷ்ணானந்தன், சரோஜினிதேவி ஆகியோரின் சகோதரியும், மணிவண்ணன் (நோர்வே), யாழினி (கனடா), புகழினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சீமா (நோர்வே), தயாகரன் (கனடா) ஆகியோரின் மாமியாரும். விஜனுஜனின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

புகழினி (அம்மு) (மகள்)

நந்தாவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (95043)

## தென்மராட்சி மாணவருக்கு!

யாழ்ப்பாணம், நவ. 28

வடமராட்சியிலிருந்து ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சக்குத் தோற்றவுள்ள சாவகச்சேரிடிறிபேக்கல்லூரிமாணவர்களுக்கான அனுமதி அட்டைகள், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் வைத்து வழங்கப்படும் என கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (க-ரி)

★ ★ ★

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இருந்து ஜி. சி. ஈ. உயர்தரப்பரீட்சைக்கு இரண்டாவது தடவையாக தோற்றவுள்ள மாணவர்கள் தமது விவரங்களை இணுவில் மத்தியகல்லூரியிலும், நெல்லியடி மத்திய கல்லூரியிலும் உடனடியாக பதிவு செய்து கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (க)

★ ★ ★

பளை மத்திய கல்லூரியிலிருந்து ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளை நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார், (க-ரி)

## ஒளிவிழா

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ். சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் வருடாந்த ஒளிவிழா இன்று புதன் கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் எஸ். எஸ். தங்கராஜா தலைமையில் நடைபெறும். பல்வேறு கலை நிகழ்வுகளும் பிரமுகர்களின் சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன. (ம-ரி)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அதிபர் வி. மாணிக்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த. அருணகிரிராஜா கலந்துகொள்வார். பரிசில்களைத் திருமதி செ. அருணகிரிராஜா வழங்குவார். (க-ரி)

## மட்டுவில் கமலாசனி வித்தி. ஆசிரியருக்கு!

யாழ்ப்பாணம், நவ. 28

வடக்கு கிழக்கு மாகாண ஆசிரியர்களின் தகவல் தரவுப் படிவங்கள் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளதால் யாழ். மட்டுவில் கமலாசனி வித்தியாலய நிரந்தர ஆசிரியர்கள் அனைவரையும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வல்வை சிவகுரு வித்தியாலயத்திற்கு வேண்டிய தகவல்களுடன் வருகை தருமாறு அதிபர் எஸ். சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ம-ரி)

## திருநெல்வேலி தெரு நாய்கள் இன்று அழிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

நல்லூர் பிரதேச சபையின் நல்லூர் உப- அலுவலக எல்லைக்குட்பட்ட திருநெல்வேலி வடக்குப் பகுதியில் இன்று புதன்கிழமை காலை 8.00 மணி முதல் 12 00 மணி வரை தெரு நாய்கள் பிடித்து அழிக்கப்படும் என்றும் –

வளர்ப்பு நாய்களை வீட்டில் கட்டி வைத்து ஒத்துழைப்பு வழங்குமாறும் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் கேட்டுள்ளார். (க-ரி)

## சுகாதாரத் தொண்டர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம். நவ. 28

நல்லூர். யாழ்ப்பாணம் பிரிவு சுகாதாரத் தொண்டர்களுக்கான நவம்பர் மாதக் கொடுப்பனவு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் நாளை வியாழன் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (க)

# மரண அறிவித்தல்கள்

## இராசநாயகம் சுவாதீஸ்வரன் (சுதா)

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட 'சுதா' என்று அன்பாக அழைக்கப்படும் இராசநாயகம் சுவாதீஸ்வரன் 26-11-2001 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசநாயகம் — தங்கலட்சுமி ஆகியோரின் அன்பு மகனும் மாலாபூஷணிதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நடராசா - தையலம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் யோகலட்சுமி, சத்தியேஸ்வரன் (பிரான்ஸ்), தனலட்சுமி, நந்தகுமார் (யாழ் தபாலகம்), ஆகியோரின் அன்புச் சகோதரனும், நல்லைநாதன் (கணபதிப்பிள்ளை அன் சன்ஸ் முன்னாள் உரிமையாளர்), விசுவலிங்கம், அரிச்சந்திரன், மல்லிகாபூசணிதேவி, ரூபச்சந்திரன் (ரூபி), இராமச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் வசுமதி, (முதலாம் வருட மாணவி யாழ் பல்கலைக்கழகம்), அகிலன், அஜந்தன், வாசுகி, நிசாந்தி, ஸ்ரீகரன், தபோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்மிளா (ஜேர்மனி), குகனேசன், பரமேசன், அகிலா ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் சரவணமுத்து (வெள்ளை அண்ணை)வின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29-11-2001) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

க. நல்லைநாதன், (மைத்துனர்)

இராமலிங்கம் வீதி,
கெனடி லேன், திருநெல்வேலி கிழக்கு. (95047)

## செல்வி சாதனா சிவலிங்கம்

(B Sc, பட்டதாரி, யாழ். பல்கலைக்கழகம்,
ஆசிரியை, இராமநாதன் கல்லூரி-மருதனார்மடம்)

வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி சாதனா சிவலிங்கம் கடந்த 25-11-2001 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29-11-2001) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி சி. சிவலிங்கம்
170/ 1 A காலி வீதி,
தெகிவளை,
கொழும்பு.
T. P NO. 732899

தகவல்-:
சி. துரைசிங்கம்
உப்புமடம் பிள்ளையார் கோயிலடி,
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு.

(95040)

## நாகமணி இராசதுரை (ஆசாரியார்)

பெரிய விளானைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 3/3, பத்திரகாளி கோயிலடி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி இராசதுரை அவர்கள் நேற்று (27—11—2001) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும் இராஜேஸ்வரி (மணி—சுவிஸ்), துரைசிங்கம் (கொழும்பு), ஆனந்தராசா (உரிமையாளர், மைக்றோ ஓட்டோ வேக்ஸ், யாழ்ப்பாணம்), பொன்ராசா, காலஞ்சென்ற சிவபாதம் (பவுண்), தவனேஸ்வரி, ரவீந்திரன், ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்), சிவகுமார் (மைக்றோ ஓட்டோ வேக்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், கோமேஸ்வரி, நிர்மலா, ஜெயலக்சுமி, பத்மினி (சுவிஸ்), பஞ்சலிங்கம் (அல்வாய்), யசோதா, லோகேஸ்வரன் (பிரான்ஸ்), கீதாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் பாக்கியம் (வவுனியா), காலஞ்சென்ற நாகம்மா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சோமசுந்தரம், பூமணி, யோகம்மா, திருநாவுக்கரசு (வில்லுத்தகட்டு கராச், ஸ்ரான்லி வீதி), காலஞ்சென்ற வனிதமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் குலதாஸ் இராஜகலோசனா (சுவிஸ்), சதீஸ்குமார் (பிரான்ஸ்), ஜெயக்குமார் (லண்டன்), கிருத்திகா, கிருஷாந்தன், துஷாந், ஜானுசாந், தனுஷாந், தனுஜா, கோபிகா, ஜானுகா, ஜனூசன், சரண்ராஜ், மயூபிரசாத், லேக்கா, பேபிசந்துரு, அரவிந், கோபிசங்கர், சாருஜன் (சுவிஸ்), நீலுஜா (சுவிஸ்), சுஜதியன், அருண்ராஜ், சுஜீவன், பௌசிகன், காலஞ்சென்ற சரணியா மற்றும் விஜித்திரா, சுமித்திரா, விதுலன், கீர்த்தன், ரஸ்னியா, பபிஜா ஆகியோரின் அன்புப் பேரனும் நவித் (சுவிஸ்), சரணியா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-11-2001) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-

இ. துரைசிங்கம் (மகன்)

3/3, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை. (சி/19504)

உதயன்

## தேர்தல் விவகாரத்தில் கண்ணாமூச்சி ஆட்டம்!

'சட்டம் ஓர் இருட்டறை' - என்பார்கள்.

பொதுத்தேர்தல் தொடர்பாக நியாயம் தேடிச் சென்ற பொது அமைப்புகளுக்கு ஏற்பட்ட அனுபவம் இதை நன்கு உறுதிப்படுத்தியுள்ளது. இருட்டறைக்குள் இடம் தெரியாமல் முட்டி, மோதிவந்த கதையாகிவிட்டது அவற்றுக்குக் கிடைத்த பாடம்.

பொதுவான தேர்தல் சட்ட விதிகள், ஒழுங்குகள், மரபுகள் ஆகியவற்றைப் புறக்கணித்து, ஒரு பக்கச் சார்பாக, அரச தரப்பு ஊடகங்கள் - மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் அரசாங்க நிறுவனங்களாகிய பத்திரிகைகள், வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் - எதிர்க்கட்சிகளுக்கு எதிராக சேற்றை வாரி இறைப்பதை ஆட்சேபித்து சட்ட நடவடிக்கை எடுக்க முயன்ற முன்னணிப் பிரஜைகளுக்கே 'சட்டம் ஓர் இருட்டறை' என்ற பாடம் அனுபவத்தில் புகட்டப்பட்டிருக்கின்றது.

பிரபல சட்ட விரிவுரையாளர் றோஹான் எதிரிசிங்க உட்பட மூத்த பிரஜைகள் பலர் இது தொடர்பாக முதலில் தேர்தல் ஆணையாளரை நேரில் சந்தித்து முறைப்பாடு செய்தனர். 'ஒரு தரப்புக்கு மட்டுமே அரச ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றன. எதிர்த்தரப்பு மீது அவதூறுப் பிரசாரம் நடத்த அரச ஊடகங்கள் துணைபோவதைத் தேர்தல் ஆணையாளர் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்து நிறுத்த வேண்டும்; இது விடயத்தில் உடனடியாக அவர் தலையிடவேண்டும்' - என்று அவர்கள் கோரினர்.

ஆனால் 'இந்த விவகாரத்தில் நீதிமன்றம்தான் உரிய நடவடிக்கை எடுக்கமுடியும். எனவே நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களைப் பெற்று வாருங்கள்!' என்று ஆணையாளர் சுட்டு விரலை நீதிமன்றத்தின் பக்கம் காட்டிவிட்டு ஒதுங்கிவிட்டார்.

மூத்த பிரஜைகள் வேறுவழியின்றி உயர்நீதிமன்றத்திடம் போனார்கள்.

"தேர்தல் ஆணையாளரிடம் நேரடியாக - குறிப்பாக - நிகழ்வுகளைக் குறிப்பிட்டு நிவாரணம் கேளுங்கள்; நடவடிக்கை எடுக்கக் கோருங்கள். அங்கு உரிய பரிகாரம் கிடைக்காவிட்டால் நீதிமன்றத்துக்கு வாருங்கள்" என்று உயர்நீதிமன்றம் திருப்பி தேர்தல் ஆணையாளர் பக்கம் வழிகாட்டி நின்றது.

மூத்த பிரஜைகளும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் மீண்டும் தேர்தல் ஆணையாளரிடம் சென்றனர்.

17ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழான தேர்தல் ஆணையகம் இன்னும் நிறுவப்படாத நிலையில் -

அந்தத் திருத்தத்தின் கீழான அதிகாரத்தைத் தான் கையில் எடுத்துப் பிரயோகிக்கலாமா என்பது குறித்து உயர்நீதிமன்றத்திடம் ஓர் உத்தரவு பெற்று வாருங்கள் என்று திரும்பவும் நீதிமன்றத்தின் களத்துக்கு பந்தை உருட்டிவிட்டார் தேர்தல் ஆணையாளர்.

அதனால் திரும்பவும் உயர்நீதிமன்றத்திடம் சென்றனர் மூத்த பிரஜைகள்.

அரசமைப்புச் சட்டத் திருத்தம் நிறைவேறினாலும் அதன்கீழ் நாடாளுமன்றத்தினால் தேர்தல் ஆணையம் ஸ்தாபிக்கப்படாத நிலையில், தான் ஒன்றும் செய்ய முடியாது என்று கையை விரித்து, இறுதியாக இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டுக்கு முடிவு கட்டியது நீதிமன்றம்.

இதற்கிடையில் -

இதே விவகாரத்துக்காக சுயாதீன ஊடக இயக்கத்தின் வர்ண கருணாதிலக தாக்கல் செய்த மனு ஒன்றின் மீது உயர்நீதிமன்றில் கருத்து வெளியிட்ட பிரதம நீதியரசர் "அரச தொலைக்காட்சி ஒருபக்கச் சார்பாக செய்திகளை வெளியிட்டால் அந்தத் தொலைக்காட்சிச் சேவையைப் பார்க்காமல் தொலைக்காட்சியை அணைத்து விடுவதுதான் உசிதமான வழி. அதுதான் தகுந்த பரிகாரம்." - என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

இப்படித் தேர்தல் பிரசார விகாரத்தில் சட்டத்துறையும், தேர்தல் திணைக்களமும் கண்ணாமூச்சி விளையாட்டுக் காட்டும் பின்னணியில்தான் -

தேர்தல் ஆணையாளரை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை அரச உயர் வட்டாரங்களில் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

தேர்தல் நெருங்கும் இச்சமயத்தில் இத்தகைய நடவடிக்கை ஒன்றை ஜனாதிபதி எடுப்பாராயின் அது பெரும விபரீத விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அவரும் அவரது அரசுத்தரப்பினரும் உணர்ந்துகொள்வது நல்லது.

---

நாடு முழுவதிலும்

# தேர்தல் வன்முறைகள் தொடர்பாக இதுவரை 600 பேர் கைதாகினர்

கொழும்பு,நவ.28

தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட தினத்தில் இருந்து இதுவரை தேர்தல் வன்முறைகளுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 600 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இவர்களுக்கெதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலீஸார் கூறினர்.

கைது செய்யப்பட்டுள்ள 600 பேரில் பலரின் பின்னணியில் பிரபல அமைச்சர்கள் பலர் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிலாபம் பிரதேசத்திலேயே தேர்தல் வன்முறைகள் தொடர்பாகப் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனை அடுத்து சிலாபம், அநுராதபுரம், அம்பாறை ஆகிய இடங்களுக்கு மேலதிக பொலீஸார் தேர்தல் கடமைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர். சில அரசியல் கட்சிகளின் வேண்டுகோளையடுத்தே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்பட்டது. (ம)

## பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், நவ.28

கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் கடந்த வருடத்துக்கான பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வெளியாகியுள்ளன. (ம-10-ரி)

---

# நாட்டு நடப்பு

### அன்னையின் அழகு

கம்பனும் வள்ளுவனும் கவி காளமேகமும்
ஔவையும் இளங்கோவும் அரியதமிழ் புலவரொன்றாய்
குண்டலமும் மேகலையும் சிலம்பும் மாட்டி
குறள் மறையும் ஐந்திணையும் மாலையாக்கி
சிந்தாமணி கலிங்கம் பதிற்றுப் பத்து சீர்மேவு
நளவெண்பா பரணியொடு கலம்பகங்கள்
ஒன்றாக நகைகளாக்கி அழகு சொட்ட
ஒண்பெரிய திருமறைகள் திலகமாக
வண்ணமுற பாரதியின் பாடலெல்லாம்
வனப்புறவே உன்புகழை வியந்து ஏற்ற
மாபெரிய வரலாற்றின் நாயகியே
மாட்சிமைநீ ஈழமணில்
பெறும்நாள் என்றோ?

*- விகடகவி.*

---

# வாளாகப் பயன்படுத்துங்கள் உங்கள் வாக்குச் சீட்டுக்களை

## கூட்டமைப்பு வேட்பாளர் மாவை அறைகூவல்

சுன்னாகம், நவ.27

எம்மினத்தை அடிமைப்படுத்தும் பேரினவாதிகள் அகன்றுபோவதற்கும், அடக்குமுறையாளர்களை விரட்டியடிப்பதற்கும் உங்கள் வாக்குச் சீட்டுக்களைப் போர்வாளாகப் பயன்படுத்துங்கள்.

- இவ்வாறு அறைகூவல் விடுத்தார் முன்னாள் நடாளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளருமான மாவை சேனாதிராசா.

சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

**தேர்தல் களம்**

1956 தனிச் சிங்களச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியதைத் தொடர்ந்து ஆரம்பமான இரத்தக்களறி, இன்று நாடே அழியும் அளவிற்கு வளர்ந்துள்ளது. இலங்கை அரசு லட்சக் கணக்கில் இராணுவத்தைக் குவித்து எம்மை அடக்கப்பார்க்கிறது.

அவலமான தமிழர்களது வாழ்க்கை வரலாற்றில் 60 ஆயிரம் மக்களை நாம் இழந்துவிட்டோம்; 20 ஆயிரம் இளைஞர்களை இழந்துவிட்டோம்; 9 லட்சத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாகியுள்ளனர்; 9 லட்சம் குழந்தைகள் எதிர்காலத்தில் கல்வி பெற வசதியற்ற, ஊட்டச்சத்தற்ற, மனவளர்ச்சி குன்றியவர்களாக ஆகியுள்ளனர்; 17 ஆயிரம் இளம் பெண்கள் விதவைகளாகியுள்ளனர்.

வலி.வடக்கில் எமது உயிர்கள், உடைமைகள் அழிக்கப்பட்டுள்ளன. 65 ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்து மீண்டும் அங்கு செல்ல முடியாதுள்ளது.

எங்கள் வரலாற்றுச் சின்னங்கள், பாரம்பரிய சின்னங்கள், கோயில்கள் யாவுமே அழிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் புதிதாகக் கோயில்களுக்குப் பணம் தருவதில் என்ன பயன் ஏற்படப்போகிறது. நிரந்தர சமாதானம் ஏற்படாத அபிவிருத்தியில் பயன்ஏதும் ஏற்படாது.

முன்னைய அரசாங்கத்தைவிட இந்த அரசாங்கத்தின் காலத்திலேயே எமது வரிப்பணத்தில் அதிக தொகை அதாவது 26 வீதம் - இராணுவச் செலவுகளுக்கு, அழிவுதரும் ஆயுதக் கொள்வனவுக்கு - பயன்படுத்தப்பட்டது. அமெரிக்காவில்கூட 6-7 வீதம் தான் பாதுகாப்புக்குச் செலவிடப்படுகிறது.

இந்த அரசாங்கம் வந்தபின்னர் தான் பொருள்கள் சேவைகள் வரி 12.5 வீதமாக அறவிடப்படுகிறது. சந்திரிகா அம்மையார் 1994இல் 7.5 வீத யுத்த வரியை அறிமுகம் செய்தார். புலிகளுடன் பேசுவேன் என்று மக்கள் ஆணைபெற்றுவந்த சந்திரிகா அம்மையாரே யுத்த வரியையும் கொண்டுவந்தார்.

அந்த வரிப்பணத்தில் உலகில் இருக்ககூடிய அழிவு ஆயுதங்களை எல்லாம் வாங்கி, தென்மராட்சியையே சுடுகாடாக்கினார். 248 பேரைக் கொன்று, 60 ஆயிரம்பேரை இடம் பெயரவைத்தார்.

விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டுமென்று உலக நாடுகளும், தமிழ் மக்களும், அரசியற்கட்சிகளும் கூறுகின்றன; ஆனால் சந்திரிகா அரசு நோர்வே மத்தியஸ்தத்துடன் நடந்த பேச்சுக்களை நிறுத்தி, யுத்தத்தைத் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

கட்டுநாயக்கா தாக்குதலுடன் யுத்தம் புதிய பரிமாணம் பெற்றுள்ளது. அரச பயங்கரவாதத்தை யாரும் கண்டுகொள்வதில்லை. விடுதலைப் போராட்டம் நடத்துவோரைப் பயங்கரவாதிகள் என்கிறார்கள். தங்களைத் தாமே ஆளவேண்டும் என்ற மக்களின் விருப்பத்தை பயங்கரவாதமாக சித்திரிக்கும் சந்திரிக்காவின் ஆட்சியை ஆதரிப்பது நியாயமா?

- இவ்வாறு அவர் மேலும் சொன்னார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் சிசிவமகாராசா அங்கு உரையாற்றுகையில், தமிழ் மக்களின் நிலையை சர்வதேசத்துக்கு வெளிபடுத்தும தேர்தலாக இது அமைகிறது. விடுதலை இயக்கத்துக்கு பயங்கரவாதம் எனப் பெயர் சூட்டுவது அப்பட்டமான அநீதி என்பதை எமது மக்கள் இத் தேர்தலில் வெளிப்படுத்த வேண்டும். விடுதலைப் புலிகள் சமமான நிலையிலிருந்தே அரசுடன் பேச வேண்டும். அதற்குப் புலிகள் மீதனா தடை முட்டுக்கட்டையாக உளளது. எனவே, புலிகள் மீதான தடையை நீக்கி, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேசுவதன் மூலமே இன்றைய பிரச்சினைக்கு முடிவு காண வேண்டும். நாம் அனைவரும் ஐக்கியப்பட்டு ஓரணியாக நிற்கையில், யுத்த நிறுத்தம் செய்து புலிகளுடன் பேச அரசை நிர்ப்பந்திக்க முடியும். எலும்புத் துண்டுகளைப் போட்டு ஈ.பி.டி.பியினர் மக்களது சுதந்திர உணர்வை, ஒற்றுமையைக் குலைக்கின்றனர். இதற்கு அரசு ஆதரவு தருகிறது. தமிழ் மக்களை அழிக்கும் யுத்தத்துக்கு ஆதரவு தருபவர்களை மக்கள் நிராகரிக்கவேண்டும். - என்றார்.



தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதன்மை வேட்பாளர் வீ.ஆனந்தசங்கரி, வேட்பாளர் ந.ரவிராஜ் மற்றும் மானிப்பாய்த் தொகுதி அமைப்பாளர் அ.முத்துலிங்கம், பெ.கனகசபாபதி ஆகியோரும் உரையாற்றினர். (ம-27)

---

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்

# தடுத்து வைக்கப்பட்டோரை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம்

கொழும்பு,நவ.28

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களது வழக்குகளை விசாரிப்பதற்கென சிறப்பு மேல் நீதிமன்றம் ஒன்று இன்று புதன்கிழமை வெலிக்கடை சிறைச்சாலைக்கு அண்மையில் திறந்து வைக்கப்பட உள்ளது.

நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் இன்று இதனை ஆரம்பித்து வைப்பார்.

நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விசாரணைகளைத் துரிதப்படுத்தும் நோக்குடன் இத்தகைய இரு விசேட நீதிமன்றங்களை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அவற்றில் முதலாவது நீதிமன்றம் இன்று ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின கீழ் கைது செய்யப்பட்டு விசாரணைகளின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விசாரணைகள் இனிமேல் இந்த நீதிமன்றத்தில் துரிதமாக இடம் பெறும். (ம)

## தெரிவத்தாட்சி அலுவலருக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.28

உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான கூட்டம் நாளை வியாழகிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். நடராசா தெரிவித்துள்ளார்.(ம-10-ரி)

---

### நாளை

கார்த்திகை 14
வியாழக்கிழமை
திதி : சதுர்த்தசி
பின்னிரவு 3.15 வரை.
நட்சத்திரம் : பரணி
மாலை 5.56 வரை.
சுபநேரம் : 7.43 - 9.13
ராகுகாலம் : 1.43 - 3.13
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒழுங்கிலாது செய்வதைவிட ஒன்றுமே செய்யாதிருப்பது மேல். - *பிளினி.*

---

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், நவ.28

யாழ். கல்விவலயத்தின் விளையாட்டு விழா எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.கல்விவலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா தலைமையில் யாழ்.இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம பிள்ளை கலந்துகொள்ளவுள்ளார்.

யாழ். கல்விவலயப் பாடசாலைகளுக்கிடையே இவ்வாண்டு நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் விழாவில் வழங்கப்படவுள்ளன.(ம-10-ரி)

## கணனி வழங்கும் நிகழ்வு

வலி. தென்மேற்கு,நவ.28

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு கணனி வழங்கும் நிகழ்வு நாளை காலை 8 மணிக்கு நடைபெறும்.

இதற்கான ஏற்பாட்டை வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை தலைவர் வெ. அ. ஜோன்சன் மேற்கொண்டுள்ளார்.

மேற்படி நிகழ்வில் ஈ.பி.டி.பி. மானிப்பாய் தொகுதி வேட்பாளர் து. பாஸ்கரன் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கான கணனி மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-185)

## ஆத்மசாந்தி பிரார்த்தனை

கோப்பாய்,நவ.28

யாழ்சிவயோக சுவாமிகளின் சீடரும ஹவாய் இந்து பீடத்தின் தலைவருமான ஸ்ரீசிவா சுப்பிரமுனி சுவாமிகளின் சிவபதப்பேறு குறித்த ஆத்மசாந்திப் பிரார்த்தனை, அன்னாரால் ஸ்தாபிக்கப்பட்ட கோப்பாய் தெற்கு சாந்திலிங்க சுவாமி கோவிலில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-72)

## பாடசாலை உபகரணம் கையளிப்பு

காரைநகர்,நவ.28

ஊர்காவற்றுறை சுருவில் ஐயனார் பாலர் பாடசாலைக்கு முப்பது ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களை 'கியூடெக்' நிறுவனம் வழங்கியுள்ளது.

இத்தளபாடங்கள் கடந்த வெள்ளிக்கிழமை 'கியூடெக்' நிறுவன இயக்குநர் அருட்தந்தை எஸ். ஜெயக்குமாரினால் சுருவில் கிராம சேவையாளர் மு.விஜயரத்தினத்திடம் கையளிக்கப்பட்டது. (ம-73)

## தேர்தல் அதிகாரிகள் சனி வருவர்

டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலையொட்டி யாழ். மாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபடுவதற்கென கொழும்பிலிருந்து 35 உயர் அதிகாரிகள் எதிர்வரும் சனிக்கிழமை இங்கு வருகைதரவுள்ளனர்.

(ம-10-ரி)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



தற்போது லண்டனில் வசிக்கின்றவர்களான அறிவொளி வீதி, புத்தூர் கிழக்கைச் சேர்ந்த திரு.திருமதி மகேந்திரன் - வசந்தராணி தம்பதியினரின் செல்வப்புதல்வன்

## செல்வன் சறாஸ்

அவர்கள்

லண்டன் கிறின் விச்சிலுள்ள 'மொடோன் மவுன்ற்' பாடசாலையில் கல்வி கற்று "பெஃஸ்லி கவுன்சில" நடத்திய 2001 - ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில்,

1. கணிதம் 126 புள்ளிகள் 2. ஆங்கிலம் 103 புள்ளிகள்
3. பொது அறிவு 119 புள்ளிகள் 4. விஞ்ஞானம் 121 புள்ளிகள்

என மொத்தம் 469 புள்ளிகள் பெற்று சிறந்த பெறுபேற்றுடன் சித்தியடைந்துள்ளார்.

இப்பரீட்சையில் சித்தி அடைவதற்கு எடுக்கவேண்டிய மொத்தப் புள்ளிகள் 434 ஆகும். ஆனால் செல்வன் சறாஸ் மேலதிகமாக 35 புள்ளிகள் கூடுதலாக எடுத்து, அப்பாடசாலையிலேயே முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார். இவ்வாறு அதித புள்ளிகளுடன் சிறந்த பெறுபேற்றுச் சித்தியடைந்தமையையிட்டு இவரை வாழ்த்துவோர்:

அம்மம்மா - முருகன் பூரணம் *(அறிவொளிவீதி)*, ச.கனகம்மா *(புத்தூர் கிழக்கு)*, தாத்தா -க.நாகமுத்து *(அறிவொளிவீதி)*, *மாமாமார்:* மு.இராசதுரை குடும்பம *(சுவிஸ்)*, மு.மகாலிங்கம் குடும்பம *(கொழும்பு)*, மு.இராசேந்திரம் குடும்பம் *(அறிவொளி வீதி)*, மு.துரைராசா குடும்பம *(புத்தூர் மேற்கு)*, மு.தியாகராசா குடும்பம் *(சுவிஸ்)*, மு.அற்புதராசா குடும்பம *(பழைய வீதி, கோப்பாய் தெற்கு)*, மு.யோகராசா குடும்பம் *(சுவிஸ்)*, இ.கவிரூபன் *(மைத்துனன் லண்டன்)*. (C/19496)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

தென்மராட்சி, நவ.28

துன்னாலை பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பின்வரும் இடங்களில் இன்று புதன்கிழமை வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி மருந்து ஏற்றப்படுமென பொது சுகாதார பரிசோதகர் க.இளங்கோ அறிவித்துள்ளார்.

காலை 9.00 மணி தொடக்கம் 10.30 மணிவரை கரவெட்டி மத்தி கவுந்தில் சனசமூக நிலையத்திலும்-

காலை 11.00 தொடக்கம் 12.30 வரை கிழவிதோட்டம் சனசமூக நிலையத்திலும் -

பகல் 1.30 மணி தொடக்கம் 2.30 மணிவரை தல்லையப்புலம் கலைமகள் சனசமூக நிலையத்திலும் -

பிற்பகல் 3.00 மணி தொடக்கம் 4.30 மணி வரை துன்னாலை பொது சுகாதாரப் பரிசோதகர் பணிமனையிலும் - வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஒளி விழா

யாழ்ப்பாணம்,நவ.28

யாழ்.சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் வருடாந்த ஒளிவிழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் எஸ்.எஸ்.தங்கராஜா தலைமையில் நடைபெறும். பல்வேறு கலை நிகழ்வுகளும் பிரமுகர்களின் சிறப்புரைகளும் இடம் பெறவுள்ளன. (ம-ரி)

## ஏசியன் கல்வி நிலையம்
## கரவெட்டி

2002 புதிய கல்வியாண்டுக்குரிய வகுப்புகள் யாவும் இன்று(28-11-2001) புதன்கிழமை பி.ப.3.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

★ தரம் 1 முதல் O/L வரையான வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
★ எமது வழமையான ஆசிரியர் குழுவுடன் இன்னும் சில ஆற்றல் மிகு புதுமுகங்கள்.
★ எமது வழமையான செயற்பாடுகளுடன் இன்னும் சில புதிய திட்டங்கள்.
★ எமது வழமையான சலுகைகளுடன் இன்னும் புதிய கணனிச் சலுகைகள்.
★ இவை அனைத்தையும் ஒருங்கே பெற்றிட அனுமதிக்கு முந்துங்கள்.

(95014) - நிர்வாகி.

## தமிழர் விடுதலைக்கூட்டணி
(கூட்டமைப்பு)
## மாபெரும் பிரசார பொதுக்கூட்டம்

காலம்: இன்று(28-11-2001) புதன்கிழமை

நேரம்: பிற்பகல் 2.00 மணி

இடம்: தாவடி அம்பலவாணர் கந்தசுவாமி கோயில் *(முருகமூர்த்தி கோயில்)* முன்றில்

கூட்டமைப்பின் பிரமுகர்கள் அனைவரும் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(94869) - தாவடி வாழ் மக்கள்.

## யாழ்.பல்கலைக்கழக கராத்தே அணியில்
# கறுப்புப்பட்டி விருது வழங்கப்பட்டவர்கள்

யாழ்.பல்கலைக்கழகத்தின் 2000-2001ஆம் வருடாந்த அமர்வில் பல்கலைக்கழக கராத்தே அணி மாணவர்களில் சிலர் கறுப்புப்பட்டிக்கான விருதினை (SHODAN) பெற்றுக்கொண்டனர்.

கறுப்புப்பட்டி விருது பெற்றவர்கள்



மேலே படத்தில் (இடமிருந்து வலமாக) கராத்தே அணியின் முகாமையாளரான கலாநிதி **N.சிவயோகன்**, பௌதிகவியல் சிறப்பு மாணவன் **K.முரளிதரன்**, பொதுவிஞ்ஞானப் பிரிவு மாணவன் **T.மோகனரங்கன்**, கணனிவிஞ்ஞான சிறப்பு மாணவன் **T.கேதீஸன்**, முகாமைத்துவ வணிக பீட மாணவன **V.சர்வானந்தன்** இவர்களுடன் கராத்தே அணியின் பிரதம பயிற்றுநர் சென்சேய் **A.றஞ்சித் சைலேந்திரகுமார் (YONDAN) - 4th DAN BLACK BELT**

கராத்தே அணி மாணவர்கள்,
யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
(95026)

# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

*சுன்னாகம் சூளானை வைரவர் ஆலயத்தைப்*

புனரமைப்புச் செய்வதற்கு நிதி தந்துதவிய பெருந்தகைகளான,



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும் -

வலி.தெற்கு சுன்னாகம்
பிரதேச சபைத் தலைவர்
**உயர்திரு.கே.கமலசேகரன்**
(பாபு)
அவர்களையும் -




*நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

சுன்னாகம் சூளானை வைரவர்
தேவஸ்தான பரிபாலன சபையினரும்,
சூளானை வாழ் மக்களும்.
(95018)

# 7 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 - 11 - 1949



உதிர்வு 17 - 11 - 1994

## அமரர் சிவகுரு நவரத்தினம்

(உரிமையாளர், கனகா புத்திரிகை அகம், திருநெல்வேலி.)

*திதி: 28.11.2001*

நீங்கள் பிரிந்து ஏழு ஆண்டுகள் ஆனாலும்
தங்கள் நினைவலைகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காது.
*உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

நிரந்தர முகவரி:
*கனக இல்லம்,*
*கைதடி கிழக்கு, கைதடி.*

தற்போதைய முகவரி:
*இல.60, பலாலி வீதி,*
*திருநெல்வேலி.*

உங்கள் பிரிவால் துன்புறும்:
மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்கள்.

(C/19502)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை சேகரம்

உரும்பிராய் வடக்கு, உரும்பிராயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சேகரம் நேற்று (27-11-2001) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும் பவளக்கொடியின் பாசமிகு தந்தையும் சந்திரசேகரனின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இதனை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

*உரும்பிராய் வடக்கு,*
*(இந்துக் கல்லூரி வீதி)*
*உரும்பிராய்.*

தகவல்:
ம.சந்திரசேகரம் (மருமகன்)
(95015)

## திருமதி பசுபதிப்பிள்ளை அமுதசுரபி
(சரவணை)

சரவணையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பசுபதிப்பிள்ளை அமுதசுரபி அவர்கள் 21-11-2001 புதன்கிழமையன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் பசுபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தன் (சட்டத்தரணி, கொழும்பு), கருணானந்தசிவம் மற்றும் விஸ்வலிங்கம் அமிர்தசுரபி (Rtd. PHI. 456, மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கௌசல்யாதேவி (கொழும்பு), யோகாம்பிகை (U.S.A), அமிர்தகௌரி (பிரான்ஸ்), தேவதாசன் (பிரான்ஸ்), பாலகௌரி (வசந்தா - புலவர் வீதி, நவாலி வடக்கு) ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகநாதன் (கொழும்பு), மகேந்திரம் (பிரான்ஸ்), இளங்கோ (நவாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும் பவானி, குணாளினி, பார்த்தீபன், துர்க்காயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (3-12-2001) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*புலவர் வீதி,*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.*

(C-19495)

தகவல்:
ந.இளங்கோ (மருமகன்),
இ.வசந்தா (மகள்)

# எங்கள் தமிழின் குரல்... சுந்தா சுந்தரலிங்கம்...

**புகழ்பூத்த வானொலி ஒலி பரப்பாளர் வீ.சுந்தரலிங்கம் அண்மையில் காலமானார். அவரது 31ஆம் நாள் நினைவை ஒட்டி இக்கட்டுரை வெளியாகின்றது.**

எங்கள் தமிழின் ஒலிபரப்புக் கலை, தன் குரலை இழந்து மாதம் ஒன்று ஆனதா...

"மீண்டும் சந்திக்கும் வரை, உங்களிடமிருந்து விடைபெறுவது சுந்தா சுந்தரலிங்கம்...."

இலங்கை வானொலி யிலிருந்து பி.பி.சி. தமிழோசை வரை தமிழால் உலகளந்த எங்கள் சிம்மக் குரலோனை, ஆஸ திரேலியாவில் தொலைத்த செய்தியில் இதயம் உறையும்.

நேரறைய பொழுதில் என் *மாணவி* யில் அவர் மனம் நெகிழ்ந்ததும், அவர் *மன ஓசையில்* நான் கவர்ந்து வாழ்ந்ததும் இனி இல்லையென்றாகும்.

"சுந்தா அண்ணை...!"

மந்திரச்சொல் இன்பமாய், எங்களுக்கு வாய்த்த சக்திக்கலை.

தமிழ், ஒலிபரப்புக் கலையில் உச்சங்களைக் காணவும், சுந்தா அண்ணை ஒலிபரபுக் கலையால் உச்சங்களைக் காணவும் நெஞ்சு நிறைந்திருந்தோம்.

ஒலிபரப்புக் கலையின் அரிச்சுவடிகளை மட்டுமா அவர் எங்களுக்காக் கினார்.

நேரான சிந்தைக்கும், நிமிர்ந்த ஞானச் செருக்குக்கும், ஓயாத துடிப்பான உழைப்புக்கும் ஆதர்ச புருஷராய் அவர் வாழ்வில் நாம் படித்த பாடங்கள்தான் எத்தனை.

## நீத்தார்நயப்புரை

அழகைச் சிறைப்பிடிக்கும் அவர் மன அழகின் காட்சியாய் அவர் கமராவுக்குள் ஒளிர்ந்த அந்த வண்ணத் துப்பூச்சி..., நல்லைக் கந்தன் தேர் விழா...: நேற்றுவரை மனதை லேசாக்கிய காட்சிகள், கலகலவென அவரோடு கலந்திருந்த பொழுதுகள்... எல்லாம இன்று நெஞ்சிலே கனக்கும்.

இந்தப் பிரிவை எங்கள் பராசக்தி அக்கா எப்படித் தாங்குவாள்...

சுந்தா அண்ணை சக்திக் கனல் என்றால், அந்தக் கனலின் சக்தி பராசக்தி அக்கா.

'செய்திறன் நேர்த்தியால் சுந்தா



அண்ணை பதித்த முத்திரைகள் ஒவ்வொன்றும் கலை முழுமைக்கும், வாழ்வின் மெய்மைக்கும் சாட்சியாய் என்றென்றும் நின்று வாழும்' என ஆறுதல் சொல்லவா...

*தூரப்பறந்து சென்றாலும்...*
*உன் நெஞ்சின்...*
*ஓரத்திலேனும் இருப்பேன் நான்...*
*எங்கள் அன்பின் ஈரம் குறையாது!*

- சென்னைக்குப் புறப்பட்ட அந்த நாள்களில், நினைவாக அவருக்குத் தந்த என் கவிதையடிகள், இன்று எட்டாத் தூரத்திற்காய் 'ஓ'வென்று அழும்.

- கலாநிதி
என்.சண்முகலிங்கன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# பரியோவான் மாணவனுக்கு மக்கள் வங்கி புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம்,நவ.28

மக்கள் வங்கியின் 40ஆவது நிறைவு விழாவினை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் 2,000 ஆண்டு மாவட்ட ரீதியில் அதிகூடிய புள்ளியினைப் பெற்ற, யாழ்.பரியோவான் கல்லூரி மாணவன் சத்தியமூர்த்தி சத்திய ரூபனுக்கு புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் இன்று நண்பகல் 12மணிக்கு பரியோவான் கல்லூரி பீற்றோ ஞாப கார்த்த மண்டபத்தில் அதிபர் எஸ். தனபாலன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் சி.இளம்பிறைநாதன் கலந்து கொண்டு புலமைப் பரிசினை வழங்குவார்.

மக்கள் வங்கியின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இவ்வாண்டு இலங்கையில் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தேசிய மட்டத்தில் கூடிய புள்ளிகளைப் பெற்ற 15 மாணவர்களுக்கும் மாவட்ட மட்டத்தில் கூடிய புள்ளிகளைப் பெற்ற 25 மாணவர்களுக்கும் இந்தப் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

கூடிய புள்ளியினைப் பெற்ற மாணவர்களுக்கு ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் தொடர்ந்து கல்வி பயில வசதியாக 2001 ஜுலை மாதம் தொடக்கம் 2003 ஜுன் வரைக்கும் மாதாந்தம் ஆயிரம் ரூபாவை மக்கள் வங்கி வழங்கும்.

(ஐ-180)

# பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம

யாழ்ப்பாணம், நவ.28

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் அடுத்த மாதம் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.அப்புத்துரை அருந்தவநேசன
SLPS. 2-II
*(யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலய அதிபர்)*

ஆளுமையும் ஆசிரிய நட்பும் அளவிலாப் புகழும் மதிநுட்பமும் அறிவும் ஆற்றலும் மிக்க அதிபர் அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 2-II இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல உயர்வுகள்பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- ஆசிரியர் கழகம்.

யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்,
*புத்தூர்.*
(95002)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1989 - 04 - 23



மறைவு 1998 - 12 - 01

**செல்வி சுந்தரேசன் வர்ணனி**

திதி: 28-11-2001

அன்பு மகள் சிவபதமடைந்து
மூவாண்டுகள் நிறைவுறும் இன்று
அவரை அன்புடன் நினைவு கூருகின்றோம்.

*139,*
*3ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.* (95000)

பிரிவால் துயருறும்:
அன்பு அப்பா, அம்மா, தங்கை,
தம்பி மற்றும் உற்றார், உறவினர்.

## பிரத்தியேக வகுப்பு

51, செட்டித்தெரு, நல்லூர்.

தரம் – 07 - 2002 இல்

**மேலும் 02 மாணவிகள் மட்டுமே அனுமதிக்கப்பட உள்ளனர்**

விண்ணப்பமுடிவு: **06-12-2001**

## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 05-12-2001

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்

"நீதிக்கு இது ஒரு போராட்டம்
இதை நிச்சயம் உலகம் பாராட்டும்"



தந்தை செல்வநாயகம்




ரெலோ ஸ்தாபகர்
தலைவர் தங்கத்துரை

☆ உடனடியான யுத்த நிறுத்தம்.
☆ புலிகள் மீதான தடை நீக்கம்.
☆ மீண்டும் நோர்வேயின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் நிபந்தனைகள் அற்ற பேச்சுவார்த்தை.
☆ வடக்கு-கிழக்கிற்கான (வன்னி உட்பட) பொருளாதாரத் தடை, மீன்பிடித்தலுக்கான கட்டுப்பாடு, பாஸ் கெடுபிடி, விவசாயப் பொருளகளைக் கொண்டு செல்வதில் உள்ள பிரச்சினைகள் நீக்கம்.
☆ தமிழத் தேசிய இனத்தின் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையை நிலை நாட்ட திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்வு.
☆ விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேச்சுவார்த்தை மூலமே நிரந்தர சமாதானம்.



தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம்



ரெலோ தளபதி
குட்டிமணி



தலைவர் அமிர்தலிங்கம்



தலைவர் சிவசிதம்பரம்



எம்.கே.சிவாஜிலிங்கம்
*(வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர்)*



*முதன்மை வேட்பாளர்*
வீ.ஆனந்தசங்கரி



*ரெலோ தலைவர்*
சிறீ சபாரத்தினம்

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

*ஒற்றுமையின் குரல் ஒலிக்கட்டும்....! உதயசூரியனின் விடியல் ஓங்கட்டும்....!!* - யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள். (94863)

கிறிஸ்தவம் (றோ.க.அல்லாதது)
க.பொ.த. சாதாரணதரம் - 2001

## மாணவருக்கான பரீட்சை வழிகாட்டி

### கருத்தரங்கு

நாள் :- 01.12.2001 (சனிக்கிழமை)
நேரம் :- மு.ப.9.00 - பி.ப. 2.30 மணிவரை (புதிய நேரம்)
இடம் :- யா/வேலாயுதம் மகாவித்தியாலயம் - பருத்தித்துறை

இம்முறை O/L பரீட்சையில் கிறிஸ்தவம் (றோ.க.அல்லாதது) பாடத்துக்குத் தோற்றும் மாணவர்களும், தரம் 10 மாணவர்களும் இதில் கலந்துகொள்ள முடியும். யாவும் இலவசம்.

*கருத்தரங்கு ஒழுங்கமைப்பு:*

*கிறிஸ்துவுக்காக இளைஞர்*
*462, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*T.P. 021-2297*

*உப காரியாலயம்:*
*சாரையடி,*
*புலோலி தெற்கு,*
*பருத்தித்துறை.*


## இடைக்காலப்படி அதிகரிப்பு

கொழும்பு,நவ.28

துறைமுக அதிகாரசபை ஊழியர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் இடைக்காலப் படியை ஆயிரம் ரூபாவினால் அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக விசேட ஊடக தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

தற்போது வழங்கப்பட்டு வரும் 2ஆயிரம் ரூபாவுடன் மேலதிகமாக ஆயிரம் ரூபா சேர்த்து மூவாயிரம் ரூபாவாக வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-4)

## முன்னாள் பிரதி அமைச்சரை கைதுசெய்ய உத்தரவு

கொழும்பு,நவ.28

மாரவில பிரதேசத்தில் கடந்த சனியன்று இடம்பெற்ற ஒரு கொலைச் சம்பவம் தொடர்பாக முன்னாள் சமூக சேவைகள் பிரதி அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவையும் அவரது உதவியாளரையும் கைது செய்யும்படி மாரவில நீதிவான் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக பூர்வாங்க விசாரணை நேற்று முன்தினம் மாரவில நீதிமன்றில் நடைபெற்றது. அதன் பின்னரே மேற்படி உத்தரவு விடுக்கப்பட்டது.

இதற்கிடையில் -

அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் சுகயீனம் எனத் தெரிவித்து அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(உ)


## 63 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 30 ☆ 03 ☆ 1960

மறைவு 27 ☆ 09 ☆ 2001

### அமரர் சுந்தரம் பாலசிங்கம்

*(முன்னாள் உரிமையாளர், அம்பிகா கடைச்சல் தொழிலகம்)*

அன்புக் குடும்ப விளக்கே! பாசதீபமே!
அணைந்ததேனோ?
பெறுக ஆத்ம சாந்தி!

எமது குடும்ப விளக்கு அணைந்த செய்தி கேட்டு, உடன்வந்து எமக்கு ஆறுதல் தெரிவித்து, உதவிகள் புரிந்த N.S.R. கடைச்சல் தொழிலக உரிமையாளர், ஊழியர்களுக்கும், பொன்னம்பல வித்தியாலய (கரணவாய்) அதிபர் க.பொன்னையா அவர்களுக்கும் மற்றும் ஏனைய பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் மேலும் உற்றார் உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இன்று (28-11-2001) புதன்கிழமை முற்பகல் நடைபெறும் அமரரது ஆத்மசாந்திப் பிரார்த்தனை வைபவத்திலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*காவில் வயல்,*
*கரணவாய் தெற்கு, கரவெட்டி.*

- மனைவி, பிள்ளைகள்.

(94802)



## நன்றிகளும் ஆதரவும்

தொண்டமானாறு கலைவாணி சனசமூக நிலைய புனரமைப்புக்கு நான்கு லட்சம் ரூபா (4,00,000/=) வழங்கியமைக்காகவும் - கலைவாணி விளையாட்டுக்கழக அபிவிருத்திக்கு ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா (1,50,000/=) வழங்கியமைக்காகவும் - கலைவாணி முன்பள்ளி ஆசிரியைகள் இருவருக்கு மாதாந்த வேதனம் வழங்கிவருவதற்காகவும் - நிலைய உறுப்பினர்கள் பலருக்கு அபிவிருத்தித் தொண்டர், கடல்வளத் தொண்டர் நியமனங்கள் வழங்கியதற்காகவும் -



"அபிவிருத்தி சாதனையாளன்"
மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும் -



ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட அமைப்பாளர்
தோழர் **கே.வி.குகேந்திரன் (ஜகன்)**
அவர்களுக்கும் -



ஈ.பி.டி.பி. வடமராட்சி அமைப்பாளரும்
பருத்தித்துறை பிரதேச சபைத்
தலைவருமான தோழர்
**ஐ.ரங்கேஸ்வரன்** அவர்களுக்கும் -



ஈ.பி.டி.பி. வல்வெட்டித்துறை பிரதேச
அமைப்பாளர் தோழர் **ச.யோகராசா**
அவர்களுக்கும் -


எமது உளப்பூர்வமான நன்றிகளையும், ஏகோபித்த ஆதரவையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- கலைவாணி சமூகம் -
*அரசடி, தொண்டமானாறு.*

(94999)



## நெஞ்சை விட்டகலா 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 28 - 03 - 1951

மறைவு 29 - 10 - 2001

### அமரர் ச.ஸ்ரீஸ்கந்தராஜா

*(Photo Sree - உரிமையாளர்)*

தெய்வத்தின் திருவுருவாய்
தமிழ்த்தாயின் தவப்புதல்வனாய்
பொதுமக்களின் புகைப்படக் கலைஞனாய்
நீதியின் உறைவிடமாய்
ஒற்றுமையின் சின்னமாய்
வையத்துள் வாழ்ந்தவரே!
கைவிட்டுப் போய் எம்மை
கண்ணீரில் மிதக்கவிட்டீர்
சொல்லத் துடித்தவற்றை
சொல்லாமல் துடிதுடித்து
மெல்லச் சரிந்தீரோ!
அப்பா, உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்:

*குளப்பிட்டி சந்தி,*
*கொக்குவில்.*

மனைவி, பிள்ளைகள்.

(94928)



## ஆன்மீகத் தொண்டர்களுக்கு ஓர் அன்பான அழைப்பு

மலர் வெளியீடு



30-11-2001

யாழ்ப்பாணம், கந்தர்மடம், மணல்தறை ஒழுங்கையில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் அம்மனின் விபூதி மகிமைபற்றிய வரலாற்றுப் பதிவேடாக புத்தக வடிவில் வெளிவரவேண்டுமென அன்பர்கள், அடியார்கள் தங்கள் அனுபவங்களைக் கட்டுரை வடிவில் சமர்ப்பித்துள்ளார்கள். கிடைக்கப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பும் வேறு சில சிறப்பு அம்சங்களும தாங்கிய நூல் நாளைமறுதினம் (30-11-2001) வெள்ளிக்கிழமை (திருக்கார்த்திகை பௌர்ணமித் தினத்தன்று) முற்பகல் 11 மணியளவில் மேற்படி மணல்தறை அம்மன் கோயிலில் வெளியிடப்பட இருக்கிறது. காலை 10 மணியளவில் நடைபெறும் பூசை வழிபாடு ஆராதனையில் பங்கெடுப்பதுடன் நூலினையும் பெற்றுச்சிறப்பிக்குமாறு அடியார்கள் அனைவரையும் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

*குறிப்பு: தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை.*

(94741)

- அம்மன் அடியார்.





## உண்மை - நேர்மை - தியாகம்

தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்
**திரு. சி. சிவமகாராசா** அவர்களை ஆதரிப்போம்.



*05-12-2001*


எம் தெரிவு இல. 11

(94858)

# தீவுப்பகுதி கடல் தொழிலாளரின் துயர் துடைக்க

# நாடாளுமன்றில் ஓங்கி ஒலித்த குரல்....!

*சபாநாயகர் அவர்களே!*



"ஓர் அப்பாவிக் கடல் தொழிலாளியிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. புங்குடுதீவிலிருந்து எழுதியிருந்தார்.

"நீங்கள் கடல் அட்டை பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். சீன மக்கள் மிகவும் விரும்பும் ருசிமிக்க உணவுப் பொருள். தங்கம் போன்று விலையானது. கடல் அமைதியாக இருக்கும்போது கடற்படுக்கையில் பெரும் அளவில் பெற்றுக்கொள்ளமுடியும். அதனை கறுப்புத்தங்கம் என நான் சொல்லமுடியும்.

"உள்ளூரில் தொழில் செய்ய தடைவிதிக்கப்பட்ட கடல் தொழிலாளர் சிலர், கப்பற்படையினர் அங்கு கடலட்டை பிடிப்பதைக் கண்டு எதிர்ப்புத் தெரிவித்தபோது, அவர்கள் நையப்புடைக்கப்பட்டனர்.

"அதற்கடுத்த நாள் ஈ.பி.டி.பியினர் இலக்கத்தகடு இல்லாத வாகனங்களில் அங்கு சென்று கடலட்டை பிடித்தனர். உள்ளூர் கடல் தொழிலாளர் எதிர்த்த போது, மெலிஞ்சிமுனைக் கிராமத்தில் ஆயிரம் வீட்டுத்திட்டத்திற்குப் பணத்திற்காக இதைச் சேகரிக்கின்றோம் எனக் கூறியுள்ளனர். அவர்களில் சிலர் ஒப்பமிட்டு அனுப்பியுள்ள கடிதத்தை இங்கு சமர்ப்பிக்கின்றேன். இவர்களின் உயிர்ப்பாதுகாப்பு வேண்டி, அவர்களது பெயர்களை வெளியிட வேண்டாம் என்று வேண்டுகின்றேன். அவர்கள் கடலில் மிதப்பதை நான் விரும்பவில்லை."

*- கடந்த ஏப்ரல் 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில் வீ.ஆனந்தசங்கரி ஆற்றிய உரையிலிருந்து.*

அப்பாவிக் கடல் தொழிலாளரின் வயிற்றிலடிக்கும் காரியத்தில் கடற்படையினரும், ஈ.பி.டி.பியினரும் இணைந்து செயற்பட்ட அக்கிரமச் செயலுக்கு எதிராகக் குரல் கொடுக்கவும் **திரு.வீ.ஆனந்தசங்கரி** அவர்கள் தயங்கவில்லை.

இனிய தமிழ் வாக்காளர்களே! உங்கள் துயர் தீர்க்க குரல் கொடுக்கும் த.வி.கூட்டணியின் முதன்மை வேட்பாளர் **திரு.ஆனந்தசங்கரி** அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து உங்கள் விருப்பு வாக்கொன்றை உரித்தாக்க வேண்டாமா? அவரது இலக்கம் 3 இற்கு புள்ளடியிட்டு பெரு வெற்றியைக் கொடுங்கள்.

## தமிழர் விடுதலைக் கூட்டணி

## வீ.ஆனந்தசங்கரி இல. 3

## - தீவுப்பகுதி கடல் தொழிலாளர்.

(C/24490)

# அகவை மூன்றில் நினைவஞ்சலி



உதிர்வு 02 - 02 - 1987

மறைவு 01 - 12 - 1998

## அமரர் வடிவேற்கரசு தேவசுதா

(நிதியா)

திதி: 28-11-2001

ஆண்டு மூன்று ஆனதம்மா
மறக்கவில்லை உன்முகம்
மனம் விட்டு உன் நினைவு மாறாதம்மா
நிதியாவே நீ மறைந்ததால் என் இதயம் துடிக்குதம்மா!
தீபம் ஒன்று அணைந்துவிட்டதம்மா
தீரவில்லை என் இதயம்
பெற்ற உன் அன்னையைத் தவிக்கவிட்டாய்!
பிரிந்து நீ சென்றதேனோ நிதியா?
தேவசுதா என்று நான் அழைத்தால்
ஓடோடி நீ வந்திடுவாய்
அப்பா உன்னை அழைத்தாரென்றோ
என்னை விட்டு பாதியிலே பிரிந்து விட்டாய்
வருந்தி இங்கு அழுகின்றேன்
நிதமும் உன் நினைவாலே.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

உன் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கும்:

உனது அம்மா - வடிவேற்கரசு செல்வராணி
அம்மப்பா - செல்லையா,
அம்மம்மா - யாகேஸ்வரி.

*சித்தம்பாதி, கரணவாய் தெற்கு, கரவெட்டி.*

(94992)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.28

தீவகக் கல்வி வலயம் நடத்திய பண்ணிசைப் போட்டிக்கான பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் நடைபெறுகிறது.

தீவகக் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் செஞ்சொற்கொண்டல் ஆறு. திருமுருகனும் -

சிறப்பு விருந்தினர்களாக வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் தேவஸ்தானத் தலைவர் ந.ஜெகநாதன், வேலணை கிழக்கு மகாவித்தியாலய அதிபர் ந.பத்மநாதன் ஆகியோரும் - கலந்துகொள்கின்றனர்.

(ஒ-4)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், நவ.28

"யாழ்ப்பாணத்து ஞான பொக்கிசங்கள்" என்ற நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை காலை 10.00 மணியளவில் கந்தர் மடம், மணல்தறை ஒழுங்கையில் உள்ள மணல்தறை அம்மன் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் சிவதொண்டன் நிலையத் தலைவர் தவத்திரு. செல்லத்துரை சுவாமிகள் ஆசியுரை வழங்கி நூலை வெளியிட்டு வைப்பார். அருட்கவி சீ.விநாசித்தம்பி பிரார்த்தனையுரை நிகழ்த்துவார்.

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயம், ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி புலவர் மு.திருநாவுக்கரசு, ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சிவ.மகாலிங்கம் ஆகியோர் வெளியீட்டுரை நிகழ்த்துவர்.

விபூதியின் மகிமை பற்றிய பல்வேறு அறிஞர்களின் கட்டுரைகள், அனுபவங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

(ம-7)

## யாழ்.விஞ்ஞான சங்கம்

பிரிவு - C (மருத்துவ விஞ்ஞானம்)

*கருத்தரங்கு:* யோக சாஸ்திரத்தின் நவீன அம்சம்
(MODERN ASPECT OF YOGASASTHIRAM)
வீடியோ பட விளக்கத்துடன்

*இடம்:* யாழ்.பல்கலைக்கழகம். நூலக கேட்போர் கூடம்
*காலம்:* நாளை (29.11.2001) வியாழக்கிழமை
பிற்பகல் 2.30-3.30 (SLT)
*அறிமுகவுரை:* டாக்டர் K.சிவநேசன்
*(முன்னாள் தலைவர், யா.வி.ச. C-பிரிவு)*
*கருத்துரை:* திரு.N.சிவனேஸ்வரராஜா
*(பெங்களூர் விவேகானந்தா கேந்திரத்தில் பயிற்சி பெற்றவர்)*

*அனைவரும் வருக.*

செயலாளர்
*யா.விஞ்ஞான சங்கம் C-பிரிவு.*

(C/19492)

உ

"வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்"

### காரைநகர் புளியங்குளம் அருளானந்தப் பிள்ளையார் கோயிலில்

### பிள்ளையார் கதை நூல்வெளியீட்டு விழா

*காலம்:* 01.12.2001 சனிக்கிழமை மு.ப. 10.00 மணி
*இடம்:* புளியங்குளம் அருளானந்தப் பிள்ளையார் கோயில் மண்டபம
தலைவர்: திரு.வே.சாம்பசிவம B.A. (Cey) S.L.P.S.அவர்கள்
*(உதவித் திட்டமிடல் பணிப்பாளர், செயலகம் - யாழ்ப்பாணம்)*
*வெளியீட்டாளர்:* இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு.கந்தையா அவர்கள்
சிறப்புரை: திரு.ஆறு.திருமுருகன B.A அவர்கள்
பண்டிதர் திரு.மு.சு.வேலாயுதபிள்ளை அவர்கள்
*(அதிபர், காரைநகர் இந்துக்கல்லூரி)*
*கௌரவிப்பு:* அந்தணச் செம்மல், மூதறிஞர், பண்டிதர் சிவத்திரு. சு.வைத்தீஸ்வரக்குருக்கள்
*வாழ்த்துரை:* திரு.ப.விக்கினேஸ்வரன அவர்கள்
*(வலயக் கல்விப் பணிப்பாளர், தீவகம்)*

*- விழா ஏற்பாட்டாளர்:*
புளியங்குளம் அருளானந்தப் பிள்ளையார் கோயில்,
புளியங்குளம், காரைநகர்.

*முக்கிய குறிப்பு:*
பிள்ளையார் கதையும் உரையும் தேவைப்படுவோர் தேவஸ்தானத்துடன் தொடர்புகொள்ளவும். (94904)




# எமது மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை உலகுக்கு அம்பலப்படுத்த...



"இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் - இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படாமல் - இராணுவத்தீர்வு காணும் முனைப்பில் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை அடக்கி ஒடுக்கவும், தமிழ்த் தேசிய இனத்தை அழித்துவிடவுமே இந்த அரசு இக்கொடிய போரைத் தொடர்ந்து நடத்தி வருகின்றது.

"நீங்கள் வாங்கிக் குவித்துள்ள நவீன குண்டுவீச்சு விமானங்களாலும், பல்குழல் ஏவுகணை ஆயுதங்களாலும், யாழ்ப்பாணத்திற்கு அடுத்தபடியாக அபிவிருத்தியடைந்திருந்த சாவகச்சேரி, தென்மராட்சிப் பிரதேசம் முற்றாக அழிக்கப்பட்டு விட்டது. குறுகிய காலத்தில் குழந்தைகளுட்பட 243 அப்பாவித் தமிழ்க் குடிமக்கள் கொல்லப்பட்டு விட்டனர். அந்தப் பட்டியல் என்னிடமிருக்கிறது. அதுவும் அப்பிரதேசத்திலிருந்து விடுதலைப் புலிகள் வெளியேறிய பின்னரே குண்டுவீச்சு நடத்தப்பட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

"ஐம்பதாயிரம் மக்கள் வன்னிக்கு ஓடித் தப்பியிருக்கிறார்கள்; ஆயிரம் பேர் வரை படுகாயமடைந்திருக்கின்றனர்; பல்லாயிரம் கோடி மதிப்புள்ள வீடு வாசல்கள், சொத்துக்கள், தொழில் துறைகள் அழிக்கப்பட்டு விட்டன.

"இது ஒரு திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கை என்றே கூற வேண்டும்."

*- நாடாளுமன்றில் மாவை சேனாதிராசா*

போரின் விளைவுகளையும் மக்கள் படும் கொடுமைகளையும் துணிவுடன் எடுத்துக் கூறக்கூடிய தமிழ் மகன்

## மாவை சோ.சேனாதிராசா அவர்களே!

எங்கள் வாக்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே.
எங்கள் தெரிவு இலக்கம் 12

## தமிழர் விடுதலைக் கூட்டணி

X 12

(C/19491)



எசக்கிமுத்து
அருணாசலம்
இல. 1



செல்லப்பு
இராஜரத்தினம்
இல. 12



கோபாலபிள்ளை
ஜெயேந்திரா
இல. 2

# யானைச் சின்னத்தில் உங்கள் முன் வரும் எமது வேட்பாளர்கள்



சின்னத்துரை
குலேந்திரராஜா
(குயிலன்)
இல. 11



முதன்மை வேட்பாளர்
தி.மகேஸ்வரன்
இல. 4



மாணிக்கத்தியாகராசா
செல்வராஜா
(சித்தியர்)
இல. 3

உங்கள் பொன்னான வாக்கை யானைச் சின்னத்துக்கு எதிரே புள்ளடியிடுவதன் மூலம் ஐ.தே.கட்சிக்கு அளித்து, பின்னர் விருப்பு வாக்குகள் மூன்றில் ஒன்றை எமது முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரனுக்கு அவரது வேட்பாளர் இலக்கமான 4இன் மேல் புள்ளடியிடுவதன் மூலமும் - மற்றைய இரண்டு விருப்பு வாக்குகளை நமது வேட்பாளர் பட்டியலில் நீங்கள் விரும்பிய இரு வேட்பாளர் களுக்கு அவர்களது வேட்பாளர் இலக்கங்களின் மேல் புள்ளடி யிடுவதன் மூலமும் - அளித்து, உங்கள் வாக்குரிமையை உரிய முறையில் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துங்கள்.



சின்னத்தம்பி
கணபதிப்பிள்ளை
இல. 10



நடராஜா
இராஜசூரியர்
இல. 5

**ஐக்கிய தேசியக் கட்சி** X

- ஐக்கிய தேசியக் கட்சி
யாழ்.மாவட்டம் -




லயனல்
திலகநாயகம் போல்
இல. 9



பொன்னையா
சிவபாதம்
இல. 6



முத்துத்தம்பி
கனகசுந்தரம்
இல. 8



முத்துக்குமாரு
சிவபாலன்
இல. 7

(C/19499)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

இராசதுரை சசிகரன் என்பவரது விசே.அ.அ(இல.0906004191), தே.அ.அ.(இல.820394445V) என்பன ஏழாலை மயிலங்காடு வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சரண்யா கல்வி நிலையம், ஏழாலை எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (C-19494)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழிகள் புறோயிலர், கல்பேட் என்பன சுத்தம் செய்து, (பாதிக் கோழி உட்பட) வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:-இல.227, பிறவுண் வீதி, (கலட்டிச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (95019)

புறோயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் தொடர்பு சிவகுமார், பருத்தித்துறை வீதி, கட்டைப்பிராய்ச் சந்தி. (95025)

## புறொயிலர் குஞ்சுகள்

N.L.D.B, Greenvally இன தரமான புறொயிலர் குஞ்சுகள் இன்று மாலை 6 மணிக்கு விநியோகிக்கப்படும். தொடர்பு: வை.சிவகுமார், 461, நாவலர் வீதி, ஆனைப்பந்தி அல்லது கிளீன் சொட் பின்புறம் யாழ்.பஸ் நிலையம். (95003)

## மணமகன் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1963இல் பிறந்த அழகான பட்டதாரி ஆசிரியைக்கு தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். உத்தியோகம் விரும்பத்தக்கது. தகுந்த சீதனம் வழங்கப்படும். விளம்பர இலக்கம் 1408 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (95010)

## இலகு திருமண சேவை

1965 ரேவதி விவாகரத்துப் பெற்ற அழகான, படித்த பெண்ணுக்கும், 1969 சித்திரை அழகான, பட்டதாரி ஆசிரியைக்கும் ஏற்ற மணமகன்கள் தேவை. இருவருக்கும் சீதனமுண்டு. துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (95006)

## விற்பனைக்கு

பெல்ஜியம் கண்ணாடி இணைந்த தேக்கம் அலுமாரி, தனிக்கட்டில், இரணைக்கட்டில் (முதிரை) விற்பனைக்குண்டு. தொடர்பு: S.சின்னத்துரை, சொர்ணவடலிப் பிள்ளையார் கோயில் அருகில், சொர்ண வடலி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு. (94976)

மூன்று மாதம் வளர்ச்சியடைந்த பிறீமா சிவப்பு, கறுப்புப் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வம், 'மங்கள மாளிகை' மாயக்கை, சிறீகாந்தா, தும்பளை வீதி, பருத்தித்துறை. (94903)

35நாள்கள் நிரம்பிய சமீரா இன சிவப்பு, கறுப்பு பேட்டுக் குஞ்சுகளும் புறோயிலர் குஞ்சுகளும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வி.குணபாகன், 1014, K.K.S வீதி, யாழ்ப்பாணம். இல.4, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P.3353. (95016)

10 நாள் வளர்ச்சியடைந்த Bovans இன சேவல் குஞ்சுகள், ஒரு மாத பேட்டுக் குஞ்சுகள், இறைச்சிக்கான சேவல்கள் விற்பனைக்குண்டு. 52, மருதடி வீதி, நல்லூர். (95017)

BROILER மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (95013)

## குருவிகள் விற்பனை

AFRICAN LOVE BIRDS குருவிகள் விற்பனைக்கு உண்டு. இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (95012)

## ENGLISH CLASSES

ஆண்டு 6 தொடக்கம் A/L வரை புதிய ஆங்கில வகுப்புகள் டிசெம்பர் 1இல் ஆரம்பமாகின்றன. (G.C.E (O/L) LITEATURE வகுப்புகள் ஆண்டு 10 லிருந்து ஆரம்பிக்கப்படும். (பாடசாலைகளில் கற்பித்த அனுபவமுள்ள ஆசிரியரால் நடத்தப்படும்) J.அரியரட்ணம், 16,சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளி. (94979)

---

# தேவை

- கணக்காளர்
- ஆண்களுக்கான ஆடைகள் வெட்டித் தைக்கத் தெரிந்தவர்கள்
- தையல் பயிலுநர்கள்

*குறிப்பு:- மாநகர எல்லைக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கவும்.*

*விண்ணப்ப முடிவு திகதி:- 10.12.2001.*

விள.இல. 1409
மே/பா, உதயன்

(95022)

---

## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

### முக்கிய அறிவித்தல்

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு **K.N.** டக்ளஸ் தேவானந்தா அவர்களால் எமது அங்கத்தவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்பட இருப்பதால் நாளை (29.11.2001) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அங்கத்தவர்கள் அனைவரும் அமைச்சு அலுவலகத்திற்கு தவறாது குறிப்பிட்ட நேரத்திற்கு சமுகம் அளிக்கவும்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்,
சாவகச்சேரி.

(95020)

---

## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001

# யாழ்.மாவட்டம் - முஸ்லிம் காங்கிரஸ்

☆ தமிழர் தன்மானம் காத்திட!

☆ தமிழ் – முஸ்லிம் ஒற்றுமை மலர்ந்திட!

☆ 1990 இலிருந்து காலத்துக்குக் காலம் இடம்பெயர்ந்த சகல மக்களும் இனமத பேதமின்றி சம உரிமையுடன் கௌரவமாக மீளக் குடியமர்த்தி புது வாழ்வு பெற்றிட!

☆ மனிதாபிமானம் மிக்க தமிழ் பேசும் மக்களின் உண்மை உணர்வை வெளிப்படுத்திட!



மெக்சா முபீன்

X 12

குடும்பத்திற்கு ஒரு வாக்கை தமிழ் - முஸ்லிம் உறவின் பெயரால் மனிதாபிமானத்துடன் அளித்திடுவோம்.

அன்பளிப்பு:-

வலி.வடக்கு, குரும்பசிட்டி கிழக்கைச் சேர்ந்த
க.இரத்தினம் (தம்பித்துரை) அவர்கள்.

(94866)

---



## நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2001

# யாழ்.மாவட்டம்



அன்புக்குரிய தமிழ் மக்களே!

உடனடி யுத்த நிறுத்தம்! தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு பேச்சு வார்த்தை, நோர்வே நாட்டின் மத்தியஸ்தம்

நிரந்தர சமாதானம். அமைதி எமது மண்ணில்!

☆ பொருளாதாரத் தடை நீக்கம்

☆ மீன்பிடித் தடை நீக்கம்



நடராஜா இரவிராஜ்

உறுதியுடன் ஆணித்தரமாக தமிழன் தன் தன்மானம் காத்து ஒற்றுமை அணியாகக் குரல் கொடுக்க

இக்கோரிக்கைகளை வலியுறுத்தி, நாடாளுமன்றத்திலும் சர்வதேச அரங்கிலும் சிங்கக்குரல் ஒன்று எதிரொலிக்க, இளைய தலைமுறை நடராஜா இரவிராஜ் அவர்களை ஆதரிப்போம், வெற்றி இலக்கம் 9 இற்கு மேல் புள்ளடியிட்டு நாடாளுமன்றம் அனுப்பிவைப்போம்!

தமிழர் தன்மானம் காக்கும் தமிழர் கூட்டமைப்பாம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களிப்போம்!

"உண்மை, நேர்மை, இலட்சியத்திற்கான அயராத உழைப்பு"

**தமிழர் விடுதலைக் கூட்டணி** X வெற்றி இல. 9

(93915)

# தமது நோக்கத்துக்கு முரணாக ஆசிரியர் சங்கம் செயற்படுகிறது

## குற்றஞ்சாட்டுகிறார் தம்பிராஜா சுபத்திரன்

யாழ்ப்பாணம், நவ. 28

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்திருப்பது அந்தச் சங்கத்தின் நோக்கங்களுக்கும் பொது நிலைப்பாட்டுக்கும் முரணானது —


— இவ்வாறு ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் வரதர் அணி சுயேச்சைக் குழு முதன்மை வேட்பாளர் தம்பிராஜா சுபத்திரன் (றொபேட்) தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது—

ஆசிரியர் சங்கம் ஆசிரியர்களின் நலன்சார்ந்த ஓர் அமைப்பு. ஆசிரியர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குக் குரல் கொடுக்க வேண்டிய அமைப்பு. அந்தச் சங்கத்தின் நிர்வாகிகளுக்கு ஓர் அரசியல் அபிப்பிராயம் இருக்கலாம். ஆனால் ஆசிரியர்களுக்குப் பல்வேறு அபிப்பிராயங்கள் உண்டு இன்று பல்வேறு அரசியல் சக்திகள் தமிழ் மக்களின் சமூக அரசியல் வாழ்நிலை தொடர்பாகப் பல்வேறு கொள்கைகளை - கருத்துக்களை - முன்வைக்கின்றன. அவ்வாறு முன்வைத்து போட்டியிடக் கூடிய நிலைமை இன்று நிலவுவது ஒரு சிறப்பம்சமாகும்.

ஆசிரியர்கள் எமது சமூகத்தில் தேடல் உள்ள மனிதர்கள். மாணவர்களின் மன எழுச்சிகளை, ஆற்றல்களைப் புரிந்துகொண்டு ஊக்கப்படுத்துபவர்கள். அவர்கள் மத்தியில் பல்வேறு அரசியல் கருத்துக்கள் இருக்கும். அதனை வெளிப்படுத்தும் சுதந்திரம் அவர்களுக்கு உண்டு,

ஆசிரியர் சங்கத்தின் கருத்துக் கூறும் உரிமையை நாம் மறுதலிக்கவில்லை. ஆனால் ஆசிரியர்களின் நலன்களுக்காகச் செயற்படும் அமைப்பு குறிப்பிட்ட அமைப்புக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்று கூறுவது சங்கத்தின் நோக்கங்களுக்கும் பொது நிலைப்பாட்டுக்கும் முரணாக இருக்கிறது என்பது எமது தாழ்மையான கருத்து.




சங்க நிர்வாகம் ஜனநாயகவாதிகள் என்று கருதுபவர்கள், வேறு பலருக்கு ஜனநாயக விரோதிகளாகப் படலாம். அவர்கள் வாக்களிக்கச் சொல்லும் நான்கு கட்சிக் கூட்டணியினரின் சொல்லுக்கும், செயலுக்கும் எவ்வளவு வித்தியாசம் உண்டு என்பது எமது மக்களில் பலருக்கு அனுபவரீதியாகத் தெரியும்.

நேற்றுவரை இந்தக் கூட்டமைப்பினரின் கருத்துக்களுக்கு மாறுபாடான கருத்துக்களைத் தெரிவித்து வந்தவர்கள், இன்றைய கருத்தாக வேறொன்றைத் தெரிவிக்கிறார்கள். இவர்கள் நாளை வேறொன்றைப் பேசமாட்டார்கள் அல்லது செய்யமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? கடந்த காலத்தில் மக்களுக்கு கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை வழங்கிய கூட்டமைப்பின் சில கட்சிகள் பின்னர் எவ்வாறு நடந்து கொண்டன என்பது யாரும் அறியாததல்ல. ஆசிரியர்களின் கருத்துச் சுதந்திரத்தின் மீது திணிக்கப்படும் கருத்து வன்முறை பொருத்தமானதல்ல ஆனால் இத்தேர்தல் தொடர்பாக ஆதரவளிக்க வேண்டியவர்கள் தொடர்பாக கருத்துப் பரிமாற்றங்கள் விவாதங்கள் நடத்தப்படுவது ஆரோக்கியமானது.

மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க வேண்டும் என்று தெரிவித்துவிட்டு, கூட்டமைப்புக்கே வாக்களிக்க வேண்டும் என்று தெரிவிப்பது முன்னுக்குப் பின் முரணான கூற்றாகும்.

தமிழ் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ள தமிழ் மக்களின் வரலாற்று வழிபட்ட பிரச்சனைகளை பேரினவாதக் கட்சிகளைத் தவிர யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் எந்தக் கட்சியும் மறுதலிக்கவில்லை. இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு பல்வேறு தரப்பினரும் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள் என்பதை ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகம் மனங்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது-

# வலி. வடக்கு மக்கள் நலன் காப்பது எமது கடமை

## கூட்டமைப்பு வேட்பாளர் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், நவ. 28

வலி. வடக்கு மக்களின் நலன்களைக் காக்கத் தம்மால் ஆன அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வது தமது கடமை என்று தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் யாழ். மாவட்டவேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

18 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்த வலி.வடக்கு மக்களின் கதி பற்றி அரசியற் கட்சிகளின் நிலைப்பாடு என்ன? என்று வலி. வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன் காப்புச் சங்கம்எழுப்பியிருந்த பகிரங்கக் கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் கஜேந்திரகுமார் அனுப்பிய செய்தியில் இவ்வாறு தெரிவித்தார்.

''தமிழர்கள் தொடர்ந்தும் அகதிகளாக வாழ முடியாது; அவர்கள் தமது சொந்த மண்ணில், சொந்த வீட்டில், மீளக்குடியமர்வதையே விரும்புகிறார்கள். அதியுயர் பாதுகாப்புப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 51 கிராமசேவையாளர்கள் பிரிவுகளைச் சேர்ந்த யாழ்ப்பாண மக்கள், அவர்களது சொந்த வீடுகளில் குடியமர்வதற்கு அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன். யாருக்குப்பாதுகாப்பு — தமிழர்களுக்கா? அல்லது இராணுவத்துக்கா?

''வடக்கிலும் கிழக்கிலும் இருந்து இராணுவம் அகற்றப்பட வேண்டும். ஆகக் குறைந்தபட்சம் அவர்கள் தமது முகாம்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்பதே எங்கள்விருப்பம்ஆகும்''

இவ்வாறு 6-12-2000 இல் நடைபெற்ற நாடாளுமன்ற சிம்மாசனப் பிரசங்க உரையின் போது காங்கிரஸ் காசித் தலைவர் திரு. அ. விநட்யகமூர்த்தி மக்கள் குரலாகத் தெளிவாக எடுத்துரைத்ததை வலி-வடக்கு இடம்பெயர்ந்தோர் சங்கத்தினர் அறிவார்கள் என்று நம்புகின்றேன் —

★ வலி-வடக்குப் பிரதேச மண்ணை அரசு சுவீகரிக்கவுள்ளதாக வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை ரத்துச் செய்யவும் —

★ உடைமைகளை,வேலை வாய்ப்புக்களை இழந்த பிரதேச மக்களுக்கு இழப்பீடு பெற்றுத் தருவதற்கும் —

★ இடம்பெயர்ந்த மக்கள் தம் சொந்த இடங்களில் மீளச் சென்று வாழவும் —

எம்மால் ஆன அனைத்து முயற்சிகளையும் செய்வோம்; இது எமது கடமை.

அரசின் தயவில் வழங்கப்படும் அரைகுறை நிவாரணங்களுக்குக் கையேந்தாது சொந்த உழைப்பில் தங்கி வாழவிரும்பும் வலி. வடக்கு மக்களின் தன்மான உணர்வினை நாங்கள் நன்கு மதிக்கின்றோம்.

யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் ஏற்படாவிட்டால் மீளக்குடியமர்வது சாத்தியம் இல்லை என்பதால்தான் நாங்கள் யுத்தநிறுத்தத்தை வற்புறுத்துவதோடு தமிழீழ விடுதலைப்புலிகளோடு மட்டும் பேசுவதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தும்படி அரசாங்கத்தை வற்புறுத்தியும் வருகின்றோம் — என்றார். (ஒ)

பொ. ஐ. முன்னணி மீண்டும் ஆட்சிக்கு வந்தால்

# இரு நிபந்தனைகளை முன்வைத்தே விடுதலைப் புலிகளுடன் பேசுவோம்

## பிரதமர் ரத்னசிறி கூறுகிறார்

கொழும்பு. நவ. 28

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வென்று பொ. ஐ. முன்னணி ஆட்சிக்கு வந்தால் அந்த அரசாங்கம் இரு நிபந்தனைகளை முன்வைத்தே விடுதலைப் புலிகளுடன் பேசும்.

— இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனித் தமிழீழக் கோரிக்கையைக் கைவிடுதல் மற்றும் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்குமாறு கோராமை ஆகிய இரண்டு நிபந்தனைகளுக்கும் புலிகள் சம்மதித்தால் மட்டுமே அவர்களுடன் இனிமேல் பேச்சு நடத்தப்படும்.

ஐ. தே. கட்சிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் இருப்பதாகநான்கூறவில்லை. அவர்களுக்கிடையில் தொடர்பு இருப்பதாகவே கூறினேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ ஆகிய கட்சிகள் ஐ. தே. கட்சியுடன் இணைந்து முன்னர் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரச் சதிசெய்தன.

விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும், தமிழ்த் தாயகத்திலிருந்து இராணுவத்தினர் வாபஸ் பெறப்பட வேண்டும் என்றெல்லாம் இந்தக் கட்சிகள் கோரி வருகின்றன.

அத்துடன் ஐ.தே.க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு-கிழக்குப்பகுதிகளுக்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைக்க சம்மதித்திருக்கின்றது. இவையெல்லாம் விடுதலைப்புலிகளின் நேரடியான விருப்பத்தையே வெளிப்படுத்துகின்றது.

இதன் மூலம் தமிழ்க்கட்சிகள் மற்றும் ஐ. தே. கட்சி ஆகியவற்றுக்கு விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது தெளிவாகின்றது.

(ம- 10)

# ஓய்வுபெற்ற படை அதிகாரிகள் தெற்கில் தேர்தல் பிரசாரம்

## ஐ. தே. கட்சி சார்பாக

ஓய்வுபெற்ற இராணுவ மற்றும் பொலீஸ் அதிகாரிகள் தெற்கில் ஐ. தே. கட்சிக்காக பிரசாரம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் இராணுவப் பேச்சாளரும், பிரதி சபாநாயகருமான மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க பொ. ஐ. முன்னணியில் இருந்து விலகி ஐ. தே. கட்சியுடன் இணைந்ததை அடுத்தே முன்னாள் இராணுவ தளபதிகள் ஐ. தே. கட்சிக்காக பிரசாரம்செய்து வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது..

ஐ. தே. கட்சி ஆட்சிக்கு வந்தால் முன்னாள் இராணுவத் தளபதியும், தற்போதைய ஆஸ்திரேலிய தூதுவருமான மேஜர் ஜெனரல் ஜனக பெரேரா பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதனால் அவரின் செல்வாக்கைப் பயன்படுத்தி நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே இவர்கள் தேர்தற் பிரசாரத்தில் ஈடுபடுவதாகவும் கூறப்படுகின்றது.

(ம-4)

# மிதிவெடி அகற்றும் பணி

சுன்னாகம் பூவோடைமயானப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியிலுள்ள விவசாயிகள் சம்மேளனம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக, இம்மிதிவெடிகள் அகற்றப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் மிதிவெடிகள் அகற்றப்படாதிருந்ததால், சுன்னாகம் தெற்குப் பகுதி மக்கள் வேறு பாதைகளூடாகவே மயானத்துக்கும் தோட்டங்களுக்கும் செல்ல வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-27)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பிரமணியம் சின்னத்தங்கம் (குஞ்சி)

குப்பிளான் சமாதி கோவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சுப்பிரமணியம் சின்னத்தங்கம் (குஞ்சி) அவர்கள் (26—11—2001) திங்கட்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் உலகநாதன் சுப்பிரமணியம் (இந்தியா) அவர்களின் அன்பு மனைவியும், பாக்கியம் (இந்தியா) அவர்களின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (குப்பிளான்) அவர்களின் மாமியும். திரு. திருமதி சுதேஸ்வரன் (ஜேர்மனி), திரு. திருமதி சுதாஸ்கரன் (லண்டன்) அவர்களின் அன்புப் பேர்த்தியும், ஸ்வாதி (ஜேர்மனி), சோபியா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் (26—11—2001) திங்கட்கிழமை இந்தியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. சுதேஸ்வரன் (பேரன்)
(ஜேர்மனி).

குரும்பசிட்டி.

S. Sutheswaran
Saarbruck Ekstr-62,
66740 Saarlouis, Germany.
T. P. - 06831 — 892459 (95023)

## நமசிவாயம் திருநாவுக்கரசு

மண்கும்பான் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வண்ணேரியை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் திருநாவுக்கரசு 25-11-2001 ஞாயிற்றுக்கிழமை வண்ணேரியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், வினாசித்தம்பி கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மற்றும் அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், தனபாலசிங்கம், கனகலிங்கம், சுந்தரலிங்கம், அருட்செல்வி, சிவலிங்கம் காலஞ்சென்ற ராதாகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத்தந்தையும், வளர்மதியின் அன்பு மாமனாரும், பத்மநாதன், காசிலிங்கம், சாந்தலிங்கம், படிகலிங்கம், தி. சந்திராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும். காலஞ்சென்ற தளையசிங்கத்தின் சகோதரனும், தர்ஷிகா, சுஜீவன், திவ்வியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26-11-2001 திங்கட்கிழமை வண்ணேரியில் நடைபெற்றன இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி. காசிலிங்கம் (கொக்குவில்)
வி. சாந்தலிங்கம் (கலட்டி)
வி. படிகலிங்கம் (மண்கும்பான்)
(மைத்துனர்கள்)

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (95011)

# இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஈ.பி.டி.பியின் நிலைப்பாடு



## 1997 ஒக்ரோபர் 21ஆம் திகதிய நாடாளுமன்ற அறிக்கையிலிருந்து..........

இனப்பிரச்சினைக்கான தீர்வாக இலங்கை அரசு 1997 ஒக்ரோபர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அரசியலமைப்பு மாற்றத்திற்கான முன்மொழிவுகளுக்கு நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும், அரசியற் கட்சிகளினால் பிரேரிக்கப்பட்ட திருத்தங்கள் பின்னிணைப்புக்களாக சேர்த்துக்கொள்ளப்பட்டன. இவற்றுள், ஈ.பி.டி.பி. சமர்ப்பித்த 19 பக்கங்களினாலான திருத்த அறிக்கையும், தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் சமர்ப்பிக்கப்பட்ட 4 வரிகளைக்கொண்ட திருத்த அறிக்கையும் இடம்பெற்றுள்ளது.

கீழே ஈ.பி.டி.பி. சமர்ப்பித்த அறிக்கையிலிருந்து முக்கிய அம்சங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த 4 வரிகளினாலான திருத்தமும் தரப்படுகின்றது.

### ஈ.பி.டி.பியின் அறிக்கையிலிருந்து

**முன்னுரை**

- அரசாங்க ஆலோசனைகளின் பாயிரம் என்ற முன்னுரையில் குறிக்கப்பட்டுள்ள "இலங்கை மக்கள்" என்ற சொற்றொடர் "இலங்கையின் அனைத்துமக்களும்" எனத்திருத்தப்பட வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கின்றோம்.
- "இலங்கையை ஒரு பல்லின, பன்மொழி, பல்மத, சமூகமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்" எனவும் பிரேரிக்கின்றோம்.

**3. அரசின் கட்டமைப்பு**

தென்னாபிரிக்க அரசியல் அமைப்பில் உள்ளது போன்று "மாகாண நிர்வாகத்தை" மாநில அரசு எனக் குறிப்பிடல் வேண்டும்.

**4. தேசிய கீதம்**

- தற்பொழுது வைபவ ரீதியான நிகழ்வுகளில் தேசிய கீதத்தின் தமிழ் மொழிபெயர்ப்புக்கு உத்தியோகபூர்வ அந்தஸ்து வழங்கப்படுவதில்லை. தமிழ் மொழிபெயர்ப்பு சிங்கள மொழியிலான தேசிய கீதத்துடன் சமமாக இருத்தல் வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

**5. பௌத்த மதம்**

- நாட்டில் பௌத்த மதத்துக்கு முதன்மைத்தானம் வழங்கப்படுவதன் மூலம் ஏனைய மதங்கள் கீழ் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. மதம்சாரா, மதப்பற்றற்ற இலங்கையையே நாம் ஆதரிக்கின்றோம்.

**6. நிர்வாக மொழி**

- அரசாங்கத்தின் முன்மொழிவுகளில் தமிழ் மொழிக்கு நடைமுறையில் சம அந்தஸ்தை வழங்காதது அவதானிக்கக்கூடியதாய் இருக்கின்றது. எனவே, "அமைச்சுக்கள், திணைக்களங்களின் தலைமை அலுவலகங்கள், சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்களில் பொதுப்பதிவேடுகள் சிங்களத்திலும் தமிழிலும் பேணப்படுதல் வேண்டும்" என்ற சொற்களைச் சேர்த்துக்கொள்வதற்கேற்ற வகையில் உறுப்புரை 35-இன் (1) ஆம் பந்தி திருத்தப்படுதல் வேண்டும்.

**7. நீதிமன்றங்களின் மொழி**

- உயர் நீதிமன்றத்திலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் தமிழ்மொழி உபயோகத்தை அரசாங்கத்தின் ஆலோசனைகள் அனுமதிக்கவில்லை. எனவே "உச்ச நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் பதிவேட்டு மொழிகளாக சிங்களமும், தமிழும் இருத்தல் வேண்டும்" என்ற சொற்களைச் சேர்த்துக் கொள்வதற்கேற்ற வகையில் உறுப்புரை 41 திருத்தப்பட வேண்டும்.

**14. வாக்காளர்களை பதிவுசெய்தல்**

- வெளிநாட்டில் வாழும் இலங்கைப் பிரஜைகள் அவர்கள் வாழும் இடங்களுக்கு அண்மையிலுள்ள இலங்கைக்கான தூதரகங்களில் வாக்காளர்களாக பதிவு செய்து வாக்கெடுப்புகளில் பங்கேற்பதற்கு ஏதுவாக அரசியல் யாப்பில் வழிசெய்யப்படல் வேண்டும்.

**16. பிராந்திய சபைகளை ஸ்தாபித்தல்**

- ஏற்கனவே (தற்காலிகமாகவேனும்) இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து சிறிய பிராந்தியங்களைப் பிரித்தெடுக்கும் உறுப்புரை 127 இல் உள்ள ஆலோசனையை நாம் அடியோடு நிராகரிக்கின்றோம். தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகத்தை தன்னிச்சையாகப் பிரித்தெடுப்பதற்குப் பின்னணியாகவுள்ள கோட்பாடு எதுவாக இருப்பினும் நாம் அதனை எதிர்க்கின்றோம். இது விடயத்தில் மக்கள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு நடத்தும் அவசியமில்லை. **வடக்கு - கிழக்கு மாகாணங்களைக் கொண்ட பகுதி இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடமாக, அதாவது, பாரம்பரிய தாயகமாகும் என்ற சரித்திர உண்மை இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை பல்லாயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்களின் தியாகங்களினால் கிடைத்த ஒரு பெறுபேறாகும்.** அரசாங்கத்தின் தற்போதைய ஆலோசனைகள் அந்த அங்கீகாரத்தை இரத்துச் செய்யப்பார்க்கின்றது. எல்.ரி.ரி.ஈ. தவிர்ந்த எல்லாத் தீவிரவாத இயக்கங்களும் ஆயுதங்களைக் கைவிட்டு, அவ்வொப்பந்தத்தின் உள்ளடக்கப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையிலேயே ஜனநாயக வழிமுறைக்குத் திரும்பின என்பதை கவனத்திற் கொள்ளல் இங்கு அவசியமாகிறது.

**17. ஆளுநர்**

(4) உறுப்புரை 129 - இன் 13ஆவது பந்தியாக பின்வருவனவற்றைச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். "நீதிமன்றங்களின் ஒரு பணியாக அல்லாத ஒரு குறிப்பிடப்பட்ட பணியைச் செயற்படுத்துவதற்கு பிராந்தியத்தின் எந்த அதிகாரப்பீடத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதென்பதில் அரசியல் யாப்பில் தெளிவின்மை காணப்படுமிடத்து ஆளுநரே அவ்வதிகாரபீடமாக இருப்பார். அத்தகைய சகல சந்தர்ப்பங்களிலும் முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில், ஆளுநரே அவ்வதிகாரத்தைப் பிரயோகிப்பார்."

**20. அரசகாணி, நீர்நிலைகள், கனிப்பொருள்கள்**

(1) அரசாங்கத்தின் ஆலோசனையில் காணப்படும் உறுப்புரை 143 - இல் எங்களுக்கு இணக்கப்பாடு கிடையாது. எனவே அந்த உறுப்புரைக்கு பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

**21. நீதித்துறை**

**21.1 உயர்நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும்**

(1) உறுப்புரை 147(1) - இன் முடிவில் "உயர்நீதிமன்றத்தின் உறுப்பாண்மையில், இயலுமான வரை தேசியஇனப் பிரதிநிதித்துவம் பிரதிபலிக்க வேண்டும்" என்ற சொற்கள் சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமென பிரேரிக்கின்றோம்.

(2) உறுப்புரை 149(1)-இன் முடிவில் "மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உறுப்பாண்மை, இயலுமானவரை தேசியஇனப் பிரதிநிதித்துவத்தை பிரதிபலிக்க வேண்டும்" என்ற சொற்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் எனப் பிரேரிக்கின்றோம்.

**22. பகிரங்க சேவை**

**22.1 தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு**

"தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பாண்மை நாட்டின் இன விகிதத்தைப் பிரதிபலிக்க வேண்டும்" எனச் சேர்த்து உறுப்புரை 194(1)-க்கு திருத்தம் செய்யப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

**24. பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கமைதியும்**

**24 (1) குற்றங்களை விசாரணை செய்தல்.**

இது தொடர்பில், பிராந்திய பொலீஸின் அரசியலமைப்பு அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படுவதை ஈ.பி.டி.பி. ஆதரிக்கவில்லை. இந்திய அரசியலமைப்பில் மாநில பொலீஸுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் போலே இங்கும் அமையவேண்டும் என நாம் பிரேரிக்கின்றோம்.

**24. (2) பிராந்திய பொலீஸ்**

(1) உறுப்புரை 217- இன் (1) (அ) உப - பந்தியின் இறுதியில் பின்வரும் சொற்றொடர்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் எனப் பிரயோகிக்கின்றோம்:-
"ஒரு பிராந்தியத்தின் பொலீஸ் சேவை செயல்முறைக்குகந்த வகையில் அப்பிராந்தியத்தின் இன விகிதத்தைப் பிரதிபலிக்க வேண்டும்."

(2) உறுப்புரிமை 217(1) (ஆ) (1) பின்வருமாறு திருத்தப்பட வேண்டும் எனப் பிரேரிக்கின்றோம்.

"ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் அப்பிராந்தியத்தின் ஆளுநரால் நியமிக்கப்படவேண்டியவர்களான பிராந்தியப் பொலீஸ் ஆணையாளரையும், பிராந்தியத்தின் முதலமைச்சரினால் பெயர் குறிப்பிடப்பட்டு ஆளுநரால் நியமிக்கப்படும் ஓர் உறுப்பினரையும் அமைச்சர்கள் சபையின் ஆலோசனைப்படி ஆளுநரால் நியமிக்கப்படும் மூன்று பிரதான சமுதாயங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று உறுப்பினர்களையும் கொண்ட பிராந்தியப் பொலீஸ் ஆணைக்குழு ஒன்றிருத்தல் வேண்டும்.

**27. சமச்சீரற்ற அதிகாரப் பரவலாக்கல்**

இந்தியாவில் காஷ்மீர் மாநிலத்துக்கு, கனடாவில் கியூபெக் மாநிலத்துக்கு, பின்லாந்தில் ஆலந்து மாநிலத்துக்கு, மலேசியாவில் சபா சராவக் மாநிலங்களிற்கு வழங்கப்பட்டதுபோன்று, **வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு விசேடமான அதிகாரங்கள் வழங்குவதற்கு ஏதுவான முறையில் அரசியல் யாப்பில் திருத்தங்கள் இடம்பெறவேண்டும் என, நாம் பிரேரிக்கின்றோம்.**

ஒப்பம்: கே.என்.டக்ளஸ் தேவானந்தா, நா.உ.,
செயலாளர் நாயகம், ஈ.பி.டி.பி.

### தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த பூரண திருத்தம்

The T.U.L.F. proposed the creation of a North east council and a South East Council which, it strongly belived, addressed fully the concerns of all people without the need for referendum. We are also strongly of the view that in any event ground realities and the displacement of large number of persons would militate against a fair and democratic outcome if a referendum was to be held in the manner evisaged in the proposals.

Sgd. Dr.Neelan Tiruchelvam,M.P . (T.U.L.F.)

**மொழி பெயர்ப்பு:**

மக்கள் கருத்தறிகை வாக்கெடுப்புக்கான தேவையின்றி, சகல மக்களினதும் அக்கறைகளைப் பூரணமாகக் கருத்திற்கொண்டு, நாம் உறுதியான நம்பிக்கை வைத்துள்ள வடக்கு - கிழக்கு சபை ஒன்றையும் தென்கிழக்கு சபை ஒன்றையும் அமைக்க வேண்டுமென த.வி.கூ. பிரேரித்துள்ளது. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், ஆலோசனைகளில் உத்தேசிக்கப்பட்ட விதத்தில் மக்கள் கருத்தறிகை வாக்கெடுப்பு நடத்தப்படுவதாக இருப்பின், தள நிலைவரங்களும் மக்களின் இடம்பெயர்வும் நீதியான, ஜனநாயக ரீதியான பெறுபேற்றினை அனுமதிக்கமாட்டா என்றும் நாம் உறுதியாக நம்புகின்றோம்.

ஒப்பம்: கலாநிதி நீலன் திருச்செல்வம் நா.உ (த.வி.கூ.)

**மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி,**
**எக்காலமும் பிரிக்கமுடியாத வடக்கு - கிழக்கு ஓர் அலகு, அதற்கு விசேட அதிகாரங்கள்**
**இலக்கை அடைய வீணைக்கே வாக்களிப்பீர்!**

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.)**

(94870)

# சமாதானமா? போரா?......

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்ல. தமிழர்களது இக்கோரிக்கை சிங்கள மக்களுக்கு எந்த வகையிலும் ஓர் அச்சுறுத்தலாக அமையவில்லை. சிங்கள மக்களது அரசியற் சுதந்திரங்களையோ அல்லது அவர்களது சமூக, பொருளாதார, கலாசார வாழ்வையோ இக்கோரிக்கையானது எவ்வகையிலும் பாதிக்கவில்லை. தமது சொந்த நிலத்தில், தம்மைத் தாமே ஆளும் ஆட்சியுரிமையோடு வாழ வழிவகுக்கும் ஓர் அரசியல் தீர்வையே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அரசியல் தீர்வு அமைய வேண்டும் என அவர்கள் வலியுறுத்துவதும் இதைத்தான்.

தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் அபிலாஷைகளை நிறைவு செய்யும் அரசியல் தீர்வுத்திட்டம் குறித்து சிங்கள அரசுடன் பேச்சுகளில் பங்குபற்றுவதற்கு எமது இயக்கம் தயாராக இருக்கிறது. நாம் சமதரப்பினராக, சுதந்திரமாக தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற தகைமையுடன் அவர்களது உண்மையான போராட்ட சக்தி என்ற அங்கீகாரத்துடன் பேச்சுகளில் கலந்துகொள்வதாயின் எமது இயக்கம் மீது விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்பட வேண்டும். தமிழீழ மக்களது ஒட்டுமொத்தமான அபிலாஷையும் இதுதான். இதனைச சிங்கள அரசியல் தலைமைகளும் சர்வதேச சமூகமும் புரிந்துகொள்ள வேண்டும்.

பரஸ்பரம் நம்பிக்கையூட்டும் ஒரு நல்லெண்ணச் சூழ்நிலையில் பேச்சுக்கள் நிகழவேண்டும். போர் நெருக்கடியும் பொருளாதாரத் தடைகளும் நீங்கிய, இயல்பான, அமைதியான சூழ்நிலையில்தான் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறவேண்டும் என நாம் காலங்காலமாக வலியுறுத்தி வந்திருக்கிறோம். இந்த நிலைப்பாட்டையே நாம் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

### சமாதானம் இல்லையேல் பிரிவதே ஒரேவழி

தமிழரின் தேசியப் பிரச்சினைக்குச் சமாதான வழிமூலம் தீர்வு காணப்பட்டால் தமிழர்களும் சிங்களவர்களும் ஏனைய சமூகத்தினரும் இந்த அழகிய தீவில், ஆனந்தமாக - ஒத்திசைவாக - ஒன்றுகூடி - வாழமுடியும் ஆயினும், அதேவேளை சமாதான மார்க்கமாகப் பிணக்கைத் தீர்ப்பதற்குச் சிங்கள தேசம் இணங்க மறுத்தால், தமிழர்களாகிய நாம் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவும் இல்லை.

சிங்களத்தின் அரசியலை நிர்ணயிக்கும் சக்தியாக இனவாதம் நீடித்து நிலைக்குமானால், அந்த இனவாதமே தமிழீழத் தனியரசு பிறப்பதற்கான புறநிலையை அமைத்துக்கொடுக்கும்.

தமிழீழத் தனியரசு உதயமாவது தவிர்க்கமுடியாத வரலாற்று நியதி என்றால் எந்தவொரு சக்தியாலும் அதனைத் தடுத்துவிட முடியாது. என்றோ ஒரு நாள் தமிழீழத் தனி நாடு பிறந்து எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## தடையே பேச்சுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான காலஅட்டவணை என்னவென்பதையெல்லாம் இப்போது கூறமுடியாது.

இலங்கையில் புலிகளின் தடையை எமது அரசு நீக்கினாலும் வெளிநாட்டில் அந்த இயக்கத்துக்கு எதிராக விதிக்கப்பட்ட தடை குறித்து நாம் ஏதும் செய்ய முடியாது. அது அந்த நாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து புலிகள் தமக்குத் தாமே நிவாரணம் தேடிக் கொள்ளலாம்.

நான் விடுதலைப் புலிகளைக் கண்டதும் இல்லை; அவர்களோடு பேசியதும் இல்லை. அவர்களோடு எனக்கு உறவோ, உடன்பாடோ எதுவுமில்லை.

இனிமேல் நாம் ஆட்சிக்கு வந்தால்தான் அதன் பின்னர் அவர்களுடன் பேச வேண்டும். அவர்களின் எதிர்பார்ப்பு என்ன என்பதை அறிய வேண்டும்.

நாம் அவர்களுடனும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்புகளுடனும் பேசி இணக்கமான தீர்வு காண்போம். லியம் பொக்ஸ் உடன்பாட்டின் பிரகாரம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் எனது இந்த முயற்சிக்கு ஆதரவு தரும்.

நாம் காணும் இணக்கப்படி அரசியல் தீர்வு ஒன்றைத் தயாரித்து பொதுமக்கள்முன் வைப்போம்; சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவோம். அதன் பின்னரே அதனை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவோம்.

புலிகள் எதை எதிர்பார்க்கின்றார்கள் என்பதை இப்போது - கற்பனையில் நான் - கூறமுடியாது.

எனினும் அவர்களோடு நான் நடத்தப்போகும் பேச்சு, ஜனாதிபதி பிரேமதாஸா, ஜனாதிபதி சந்திரிகா ஆகியோர் நடத்திய பேச்சுக்கள் போல தோல்வியில் முடிவதற்கு வாய்ப்புகள் அதிகம் இல்லை.

இந்தப் பேச்சுக்களில் நோர்வே, இந்தியா போன்ற பல சர்வதேச தரப்புகளும் சம்பந்தப்பட இருப்பதால் - அவற்றின் உதவி, ஒத்துழைப்பு கிட்டும் ஆதலால் - இப்பேச்சு தோல்வியில் முடிவடையாது.

வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாக சபை என்பது புதிய விடயமல்ல. ஏற்கனவே ஜனாதிபதி குமாரதுங்கவினால் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட திட்டமே அது. அதனைச் செயற்படுத்துவதன் மூலம் வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் முழுப்பகுதியிலும் அரசின் நிர்வாகத்தை நாம் உறுதிப்படுத்துவோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் தமிழ்க் கூட்டமைப்புடன் எமக்குத் தொடர்பு ஏதுமில்லை. தற்போதைய அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றுவதற்காக நாம் அவர்களோடு அப்போது, அதுகுறித்துப் பேச்சு நடத்தியது உண்மை. எனினும் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் நாம் அவர்களோடு தொடர்புகொள்ளவேயில்லை.

அது மட்டுமல்லாமல், வடக்கு - கிழக்கில் - திகாமடுல்ல தவிர்ந்த - ஏனைய மாவட்டங்களில் தேர்தலில் எமக்கு நேரடிப் போட்டி தமிழர் கூட்டமைப்புத்தான்.

ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் தனியான விஞ்ஞாபனம் வெளியிட்டு தனியாக இயங்குகின்றார் என்பது தவறு. யுத்தம் நிறுத்தப்பட வேண்டும், புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தப்பட வேண்டும், அமைதித் தீர்வு காணப்பட வேண்டும் என்றுதான் அவர் வலியுறுத்தி வருகின்றார். அதில் தப்பேதுமில்லையே!

- என்றார் ரணில் விக்கிரமசிங்க.

(உ)

---

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகம்

## பாராட்டி வாழ்த்துகின்றது

### யாழ். இந்துக் கல்லூரியின் வரலாற்றில் ஒரு சாதனை

### யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் வரலாற்றிலும் ஓர் அரிய சாதனை

இவ்வருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் யாழ்.மாவட்டதில் 70 மாணவர்கள் எல்லாப் பாடங்களிலும் "A" சித்திகளைப் பெற்றுள்ளார்கள். இதில் யாழ். இந்துக் கல்லூரியில் 22 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குரிய மூன்று பாடங்களிலும் "A" சித்திகளைப் பெற்றுள்ளார்கள். இது யாழ்.மாவட்டம் கண்டிராத ஓர் உயரிய பெறுபேறாகும்.

இப்பெறுபேறுகளைப் பெற்றுத்தந்த பின்வரும் மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் நாம் பெருமையடைகின்றோம்.

| கணிதப் பிரிவு | உயிரியல் பிரிவு |
| --- | --- |
| 01) சிவநாதன் அபராஜிதன் | 01) துரைராஜா அனுஜன் |
| 02) சிறீஸ்கந்தராஜா பரணீதரன் | 02) பாலசிங்கம் பாலகோபி |
| 03) வரதராஜா கஜமுகன் | 03) சிவராஜா கார்த்திகன் |
| 04) அருளானந்தம் கஜவதன் | 04) மனோகரன் லக்ஸ்மன் |
| 05) சிவரத்தினம் முகுந்தன் | 05) நடராசலிங்கம் மதுசூதனன் |
| 06) தேவராஜா பிரகாஷ் | 06) தெட்சணாமூர்த்தி பிரஷாந் |
| 07) பேராயிரவர் சுபகேசன் | 07) தளையசிங்கம் சுகந்தன் |
| 08) சண்முகரத்தினம் சுதாகர் | 08) பரமநாதன் திலீபன் |
| 09) சுந்தரராஜா லவன் | 09) முத்துக்குமாரசுவாமி ராஜ்குமார் |
| 10) சபாரத்தினம் கேபாஜித் | 10) குணரத்தினம் செந்தூரன் |
| | 11) நாகராஜா தரணிதரன் |

வர்த்தகப் பிரிவு

01) இராஜேந்திரம் தர்சன்

(C/19500) - ஆசிரியர் கழகம்.

---


## ஸ்ரீவல்லிபுரா போட்டோ

☆ மேலும் ஒரு தொகுதி படச்சுருள்கள் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன.

☆ 02.12.2001 அன்று படச்சுருள்களும் வீடியோ கசற்றுகளும் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்படும்.

நல்லூர் 021-2604 (95039) புலோலி 070-212720


---


## ஐடியல் கல்வி நிலையம்

நீர்வேலி.

இன்று (28.11.2001) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புதிய வகுப்புகள் அனைத்தும் ஆரம்பமாகின்றன.

(C/19511) - அதிபர்.


---

மாவை கொல்லங்கலட்டி

பிள்ளையார் கோயில் - சிவன் கோயில்

## திருக்கார்த்திகைத் தீப உற்சவம்

30.11.2001 வெள்ளிக்கிழமை பிற்பகல் தீப உற்சவம் நிகழும். அடியார்கள் 12.00 மணிக்கு முன் தெல்லிப்பழை தடைமுகாமுக்கு வரவும். வாகனத்தில் அழைத்துச் செல்லப்படுவர்.

(95031) - அறங்காவலர்.

---

## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

## முக்கிய அறிவித்தல்

மன்ற அங்கத்தவர்கள் அனைவரும் நாளை (29.11.2001) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ்.அமைச்சு அலுவலகத்திற்குமுன் வருகைதரும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

செயலாளர்,
கைத்தொழில் வணிகர் மன்றம்,
சாவகச்சேரி.

(95036)

---

## மாபெரும் பிரசாரக் கூட்டம்

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெறும் பிரசாரக் கூட்டம்.

தலைவர்:- திரு. S. நக்கீரன்

இடம்:- நாச்சிமார் கோயிலடி, முருகமூர்த்தி கோயிலருகில்.

காலம்:- இன்று (28.11.2001) புதன்கிழமை மாலை 5.00மணி.

தன்மானத் தமிழர்கள் அனைவரையும் அணிதிரண்டு வருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(94872) - நாச்சிமார் கோயிலடி இளைஞர்கள்.

---

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

யா/திருக்குடும்ப கன்னியர்மட பழையமாணவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசுபெறும் இலக்கங்கள்.

| | |
| --- | --- |
| முதலாவது பரிசு இல. | 787 |
| இரண்டாவது பரிசு இல. | 3225 |
| மூன்றாவது பரிசு இல. | 425 |

ஆறுதல்பரிசுக்குரிய இலக்கங்கள்:-

| | |
| --- | --- |
| முதலாவது பரிசு | 3077 |
| 2ஆவது பரிசு | 1342 |
| 3ஆவது பரிசு | 3348 |
| 4ஆவது பரிசு | 3549 |
| 5ஆவது பரிசு | 414 |

மேற்படி பரிசுகளை பாடசாலை அதிபருடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
யா/திருக்குடும்ப கன்னியர்மட
பழைய மாணவர் சங்கம்.

(95032)

---

## முக்கிய அறிவித்தல்

நுணாவில், மட்டுவில், சரசாலை வணிகர் கழகத்தைச் சேர்ந்த சகல உறுப்பினர்களும் நாளை (29.11.2001) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் அலுவலகத்துக்கு கொடுப்பனவு சம்பந்தமாகத் தீர்மானம் எடுக்கவேண்டியிருப்பதால் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கோள்கின்றோம்.

*நுணாவில், மட்டுவில், சரசாலை. வணிகர் கழகம்.* (95027) ம. சண்முகலிங்கம், தலைவர்.

---

## கண்ணீர்ப் பூக்கள்

எமது பாடசாலை ஆசிரியர்

திரு.வே.அன்பழகன்

அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி வேலுப்பிள்ளை செல்லம்மா

அவர்கள் இறைபதம் எய்தியமையையிட்டு பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் கண்ணீர்ப்பூக்களைச் சமர்ப்பித்து அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர் குழாம்,
யா/நுணாவில் மேற்கு
அ.த.க.பாடசாலை;
யா/இந்து ஆரம்ப பாடசாலை

(95035)

---

## இதய அஞ்சலி

## செல்வி சாதனா சிவலிங்கம்

B.Sc. (Hons) 1st Class

எமது கல்லூரி மாணவ முதல்வர்களின் பொறுப்பாசிரியரும், இரசாயனவியல் ஆசிரியையுமான

*செல்வி சாதனா சிவலிங்கம்*

அவர்களின் திடீர் மறைவையிட்டு அவரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அமரருக்கு இதய அஞ்சலியைச் சமர்ப்பித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.* (95033) மாணவ முதல்வர்களும், இன்ரறக்ட் கழகமும்.

---

## மரண அறிவித்தல்

### திருமதி மயில்வாகனம் சரஸ்வதி

சுண்டிக்குளியைச் சேர்ந்த மயில்வாகனம் சரஸ்வதி நேற்று (27.11.2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் (புறாடி)யின் அன்பு மனைவியும் சண்முகலிங்கம் (புறாடி), பஞ்சலிங்கம் (புறாடி), சற்குணவதி, சிவபாக்கியவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், தாமோதரம்பிள்ளை, பேரம்பலம், கமலாம்பிகை, விஜயாம்பாள் ஆகியோரின் அன்பு மாமியாரும், குணரத்தினம் சிராணி, ஞானசீலன் சுவேந்தினி, மகேந்திரன் சுபாஷினி, இராசமித்திரன் பாமினி, பாஸ்கர், காஞ்சனா, தர்சன் ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2001) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*No .6, பாரதிவீதி, சுண்டிக்குளி.* த.தாமோதரம்பிள்ளை (மருமகன்)



நேற்றைய மாவீரர் தினத்தில் தலைவர் வே.பிரபாகரன் ஈகைச்சுடர் ஏற்றிய பின்னர் மௌன அஞ்சலி செலுத்துகின்றார்.

# குடாநாட்டிலும் மாவீரர் தினம்; பல்கலையில் அஞ்சலி வைபவம்

மாவீரர் தினம் நேற்று குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டதாக எமது செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

நேற்று மாலை 6.35 மணிக்கு குடாநாட்டில் பரவலாக கோயில்கள், தேவாலயங்களில் மணிகள் ஒலித்தன என்றும் அவர்கள் தகவல் தெரிவித்தனர்.

இதேவேளை -

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று மாலை 6 மணியளவில் ஒன்றுகூடிய நூற்றுக்கணக்கான மாணவர்கள் பல்கலைக்கழக சூழலில் மெழுகுவர்த்திகள் மற்றும் ஈகைச் சுடர்களை ஏற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் அதனைத் தொடர்ந்து மாணவர்களால் புரட்சிப் பாடல்களும் பாடப்பட்டன. வளாகத்தை சூழவுள்ள பகுதிகளிலுள்ள ஆலயங்களில் மணி ஓசை எழுப்பப்பட்டது.

வடமராட்சி மற்றும் மானிப்பாய், நவாலி, சுன்னாகம் ஆகிய பகுதிகளில் உள்ள ஆலயங்களிலும் மணிகள் ஒலித்தன என்றும் ஆங்காங்கே மாவீரர்களை நினைவுகூர்ந்து தீபங்களும் ஏற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

நகரப் பகுதியிலும், பல்கலைக்கழகத்திலும் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.

இதற்கிடையில் -

மாவீரர் தினத்தை ஒட்டி நேற்று படையினர் பல்வேறு பகுதிகளிலும், சோதனைச் சாவடிகளிலும் பொது மக்களை தீவிர சோதனைக்கு உட்படுத்தினர். (க-6-9-117-15)

## எழுதுமட்டுவாழில் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம்,நவ.28

எழுதுமட்டுவாழில் முன்னணி காவல் நிலைகளை நோக்கி நேற்று அதிகாலை 5.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

அனுராதபுரத்தைச் சேர்ந்த ரியிரத்நாயக்க என்பவரே உயிரிழந்தவராவார். (க-117)

## இந்துக் கல்லூரி மாணவருக்கு!

யாழ்.இந்துக் கல்லூரியில் இவ்வருடம் நடைபெற்ற ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி மூன்று பாடங்களிலும் சித்தி பெற்ற மாணவர்கள் அனைவரையும் இன்று காலை குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும் காலைப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் ஏ.சிறிகுமரன் தெரிவித்துள்ளார். (ம-ரி)

## வன்னியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆள்காட்டிவெளி ஆகிய பகுதிகளிலும் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் போராளிகளுடன் பொது மக்களும் கலந்துகொண்டு தங்களின் இதயபூர்வமான அஞ்சலிகளைச் செலுத்தினர்.

**வவுனியாவில்....**

வவுனியா குருமண்காடு, காளி கோயில், பூந்தோட்டம், மாணிக்கப் பிள்ளையார் கோயிலடி ஆகிய பகுதிகளில் புலிக்கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன. வவுனியா எங்கும் பரவலாகச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. வழமைக்கு மாறாக இம்முறை பெரும் எண்ணிக்கையான சுவரொட்டிகள் காணப்பட்டன.


குறிப்பிட்ட சில பகுதிகளுக்குச் சென்ற படையினர் அங்கு காணப்பட்ட சுவரொட்டிகள் மற்றும் புலிக் கொடிகளை அகற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நகரில் அன்றாட நடவடிக்கைகள் வெகுவாகக் குறைந்திருந்தன. காலையில் சில கடைகள் திறக்கப்பட்டிருந்தன. ஆனால் முற்பகல் அளவில் அனைத்துக் கடைகளும் இழுத்து மூடப்பட்டன. முக்கிய வீதிகளில் பொலீஸாரும் படையினரும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

**மன்னாரிலும் சுவரொட்டிகள்**

மன்னார் நகரிலும் மாவீரர் தினம் தொடர்பான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. நகரில் சன நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. பாடசாலைகளில் மாணவர் வரவும் குறைந்திருந்தது.

காலையில் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. படையினரின் ரோந்து நடவடிக்கையை அடுத்து கடைகள் திறக்கப்பட்டன. மக்கள் வீடுகளில் முடங்கி இருந்தனர். (க-6-9)



தெற்கில் இருந்து குடாநாட்டுக்கு வருகை தந்துள்ள நீதிக்கும் சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் பிரதிநிதிகள் நேற்று மாலை யாழ்.ஆயர் இல்லத்தில் சர்வமதக் குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட நீதிக்கும் சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கை குழு பிரதிநிதிகளான தென் இந்தியத் திருச்சபை போதகர் ஜொகான் தேவானந்தா அவரது பாரியார் மாலினி தேவானந்தா மற்றும் அனுல சிறியலதா, தயா தஹநகல்ல, சரத் முனசிங்க, ரயிஸ்ரன் வெயின்மென் ஆகியோரைப் படத்தில் காணலாம். *(படம்:பொ.இராஜேஸ்வரன்)*

### வாக்காளர் அட்டைகளை அபகரிக்க முயன்ற

# ஈ.பி.டி.பி. வேட்பாளர் நேற்று வவுனியா பொலீஸாரால் கைது

வவுனியா, மடுகந்தைப் பகுதியில் நேற்று வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்ட சமயம், அவற்றை அபகரிக்க முயற்சி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஈ.பி.டி.பி. வேட்பாளர் ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் ஈ.பி.டி.பி. வேட்பாளரான சுப சிங்க முதியான்சலாகே குமாரசிங்க என்பவரே வவுனியா பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

தபால் திணைக்களத்தால் வாக்காளர் அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டபோதே அவற்றை பிரஸ்தாப வேட்பாளர் பறிக்க முயற்சி செய்தார் என்று பொலஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-164)

## போலி முகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் முகவர்கள் போலவும், புலிகளின் பேச்சாளர்கள் போலவும் காட்டிக் கொண்டு வாக்கு வேட்டையாடுவதிலேயே தமிழ்க் கூட்டு எனக் கூறுவோர் முதல் மகேஸ்வரன் ஈறாக சகல கட்சியினரும் முனைப்புக் காட்டியிருந்தனர்.

எனினும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக எதுவித அக்கறையும் புலிகளுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துள்ள புலிகளின் தலைவரது உரையானது, தமிழ்க் கூட்டு எனக் கூறும் வேட்பாளர்களது முகத்திரையைக் கிழித்துள்ளது என்பதே உண்மையாகும்.

மேலும் தமிழர்களும் சிங்களவர்களும் இந்த அழகிய தீவில் ஆனந்தமாக, ஒத்திசைவாக, ஒன்றுகூடி, வாழமுடியும் எனப் புலிகளின் தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டிருப்பது ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சக வாழ்வு காணலாம் என்னும் ஈ.பி.டி.பியின் நிலைப்பாட்டினை வலுவூட்டுவதாக இருக்கிறது.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)


**கணக்கீடு**
**A/L 2001 Day Class**
பிரிவு 01 - ஆரம்ப அலகிலிருந்து
விரைவான அலகு ரீதியான மீட்டல்
(கடந்தகால பரீட்சை வினாத்தாள்கள் உட்பட)
ஆரம்பம்:- நாளை 10.00 a.m.
பிரிவு 02 - கம்பனி வெள்ளி 1.00 p.m.
ஆசிரியர்:- S.தவா B.Com (Hons) (Acc.Spl)
"எத்தனை மாணவர்கள் படித்தார்கள் என்பதை விட என்ன பெறுபேறை என் மாணவன் பெற்றான் என்பதுதான் எனக்குப் பெருமை" - ஆசிரியர்.
(C/19508)

**கணக்கீடு**
**A/L 2001 DAY CLASS**
ஆரம்பம் நாளை 2.pm
ஆசிரியர் S. தவா
B.com (HONS) (Acc.spl)
வாணி கல்வி நிலையம்
சுன்னாகம்

**விற்பனைக்கு**
8 அடி டிஸ்க், டிஜிட்டல்+ அனலொக், ரிசீவர், EUROSTAR L.N.B.F விற்பனைக்கு உண்டு
லலிதா ஜுவல்லறி
இல.213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் T.P-2863

**A/L 2002**
**DAY CLASS**
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்:—
கலை – 1.12.2001 காலை 8 மணி
வர்த்தகம் – 2.12.2001 காலை 8 மணி
**DMI**
யாழ்நகர்

**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
புதிய ஆண்டு 2002 இற்கான
O/L தொடக்கம் தரம் 6 வரைக்கான
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 30.11.2001
காலை 9 மணி
விடுமுறை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் ஒரு மணிவரை வகுப்புகள் நடைபெறும்.
(94990)

கல்வி ஆண்டு 2002
**வினைல்ஸ் கல்வி நிலையம்**
சுன்னாகம்.
தரம் 5 தொடக்கம் 11 வரையான வகுப்புகள் எமது வழமையான ஆசிரியர்களுடன் 30.11.2001 வெள்ளி அன்று ஆரம்பமாகின்றன.
(94964) - நிர்வாகி.

**IBMS**
கற்கை அலகுப் பரீட்சைகள்
Corel Draw
Page Maker
புலமைப் பரிசில்த் திட்டம் I,II,III, மாணவருக்கான மேற்படி பரீட்சைகள் இம்மாதம் வெள்ளிக்கிழமை 30ம் திகதி IBMSன் யாழ் காரியாலயத்தில் நடைபெறும் Corel Draw பரீட்சை காலை 9.00-11.00 வரையும் Page Maker பரீட்சை பிற்பகல் 1.00-3.00 மணி வரை நடைபெறும். செய்முறைப் பரீட்சைகள் 30/11/2001 பிற்பகல் 2.00-5.00 மணிவரை நடைபெறும்.
17/11/2001 Director (Ad)

**SUBRA (14)**
சித்தன்கேணி
தரம் 3 - O/L வரையான
புதிய பிரிவு ஆரம்பம்
01.12.2001 (சனி) காலை 7.30
☆ மாதாந்தம் பரீட்சைகள்
☆ இலவச கணனி வகுப்புகள்
☆ மேலதிக பாடம் சிங்களம், பேச்சு ஆங்கிலம்
☆ மாணவர் வரவின்மை உடனுக்குடன் அறியத் தரப்படும்
☆ மாதாந்தம் பெற்றோர் - ஆசிரியர் கலந்துரையாடல்
☆ கடமை - கண்ணியம் -கட்டுப்பாட்டு உடனானஒரே நிறுவனம்
**"SUBRA"**

**பிறிமா மா விநியோகம்**
இன்று (28.11.2001) புதன்கிழமை காங்கேசன் துறைமுகத்திலிருந்து இறக்கப்படவுள்ள மாவை நேரடியாகப் பெறவிரும்புவோர், இன்று ஓடர்களைப் பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்.
நிர்வாகம்,
தொலைபேசி: 2653 வி.எஸ்.பி.குறூப்.
(94980)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.11.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.